# முரசொலி



மு. கருணாநிதி எழுதும்

# சுருளிமலை

... முதல் அத்தியாயம் ...

கற்பனை உரையாடல்

# "அட ராமா!"

[மீனம்பாக்கத்திலிருந்து அப்பொழுதுதான் நேரு திரும்பிக் கொண்டிருந்தார்.]

நான்: நேரு ஐயா! வணக்கம்!

நேரு: க்யா போல்தா? நஹி மாலூம்!

நான்: நேருஜி! சென்னைக்கு வந்ததில் மிக்க மகிழ்ச்சிதானே!

நேரு: முன்பெல்லாம் சென்னைக்கு வரும்பொழுதெல்லாம் மகிழ்ச்சியோடு வருவேன்! ஏனெனில் அப்பொழுது குமுறிக் கொண்டிருந்த வடநாட்டைவிட சென்னை அமைதியாக இருந்தது! ஆனால் சென்ற ஐந்தாறு மாதங்களாக இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைக் காணும்பொழுது, உள்ளபடியே என் உள்ளம் பயத்தால் நடு நடுங்குகிறது! இங்கு நடப்பதெல்லாம் அற்புதமாக இருக்கிறதே!

நான்: ஆமாம்! இப்பொழுதுதான் சென்னை மக்கள் தூங்கி விழித்திருக்கிறார்கள்! முன்பு தூங்கிக் கொண்டிருந்தபொழுது வந்தீர்கள்—அமைதியாக இருந்தது!

நேரு: ஆமாம்! சட்டத்தை எரிப்பதின் மூலம் சாதி ஒழிந்துவிடுமா என்ன?

நான்: அது சரி! தாங்கள் முன்பு வெளிநாட்டுத் துணிக்கு தீ வைத்தீர்களே! ஒரு வெளிநாட்டுத் துணிக்கு தீ வைப்பதின் மூலம், எல்லா வெளிநாட்டுத் துணிகளும் அழிந்து விடுமா? உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது சட்டத்தை நீங்கள் துச்சமாக மதிக்கவில்லையா? தந்திக் கம்பங்களை உங்கள் தொண்டர்கள் தரைமட்டமாக்கவில்லையா? தபால் தந்தி அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்படவில்லையா?

நேரு: அதெல்லாம் அந்நியர்களை அடித்துவிரட்ட! வெள்ளையனை வெளியேற்ற!

நான்: இங்கே நடப்பதெல்லாம் அத்தகையதுதான்—சாதிகளை ஒழிக்க!

நேரு: நீரும் அந்த இயக்கத்தைச் சார்ந்தவரோ! சரி! சரி! உங்களிடம் அதைப்பற்றி விவாதிப்பதில் பயனில்லை!

நான்: அது தொலையட்டும்! பனிரெண்டு குதிரைகள் முன்னால் பவனி வர, தாங்கள் பின்னால் பவனி வந்த காட்சி வெகு பிரமாதம்! பிரமாதம்!

நேரு: இதிலென்ன பிரமாதமிருக்கிறது! ஒரு சிறு பொதுக் கூட்டத்தைக்கூட உங்கள் காமராசர் சர்க்காரால் ஒழுங்காக ஏற்பாடு செய்ய இயலவில்லை! போலீஸ் பாதுகாப்புதான் பிரமாதம்!...அது போகட்டும்! நீங்கள் அசாம் தலைநகரில் கூடப்போகும் கௌகத்திக்கு வந்து பாருங்கள்! ஒரு காங்கிரஸ் கூட்டத்திற்காக அவர்கள் இப்பொழுதிலிருந்தே ஏற்பாடு செய்கிறார்கள்! புதிதாக சாலைகள் அமைக்கிறார்கள்! சோலைகளை அழகு படுத்துகிறார்கள்! கௌகத்தி சொர்க்க உலகம் போல் காட்சியளிக்கப் போகிறது! பன்னிரெண்டு குதிரைகள் பவனி கண்டே பிரமாதமெனப் பகரும் நீர் அங்கே வந்து பாரும்! அறுபத்திமூன்று யானைகள்! அழகாகப் பவனி வரப்போகிறது! உங்களால் ஒரே ஒரு சிறு கூட்டத்திற்குக்கூட ஒழுங்கான ஏற்பாடுகள் செய்ய இயலவில்லை! பெரிய மாநாடு — இலட்சக் கணக்கில் செலவு செய்து அசாமில் நடக்கப்போகிறது! காங்கிரஸ் பெருமை அப்பொழுது [illegible] சர்க்கார் ஏழை [illegible]? அது சரி! [illegible] மருத்துவ நிலையத்தின அருகில் தாங்கள் புகன்றதென்ன?

நேரு: உழைப்பவர்களே நாட்டிற்கு நல்லது செய்பவர்கள்! உண்டு களித்திருப்பவரே நாட்டின் துரோகிகள்! தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்! அந்த முதுகெலும்பு ஆரோக்கியமாகவும் பலமாகவும் இருந்தால்தான் நாடு நலம் பெறும்!

நான்: என்ன அழகான பேச்சு!... உள்ளபடியே எங்கள் அண்ணாவைப் போலவே நீங்களும் பேசுகிறீர்கள்! ஆனால் 'வாய்ச் சொல் வீர'ராகத்தான் இன்னும் இருக்கிறீர்கள்! தொழிலாளரை தங்கள் பேச்சால் ஏமாற்றி விடலாம்! அறிஞர்கள் யாவரையும் ஏமாற்ற இயலுமா? உங்கள் ஆட்சியில் உண்டு களித்திருப்பவர்களுக்குத்தானே உயர்ந்த பதவி கிடைக்கிறது? அப்படியிருக்க உழைப்பின் உயர்வை எப்படி உணர முடியும்? சரி! நாடு நலம் பெறுவதென்றால் என்ன பொருள்?

நேரு: எல்லோருக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்க வேண்டும். உணவு, உடை, உறைவிடம் யாவும் கிடைக்க வேண்டும்! எல்லோரும் கல்வி அறிவு பெற வேண்டும்! இதைப் பெற ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்! நான் இந்நாட்டின் பிரதமர்! ஆனால் நான் என்னை ஓர் தொழிலாளியாகவே நினைத்துக் கொள்கிறேன்! நானும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்!

நான்: நல்ல உபதேசந்தான்! ஆனால் உண்மையில் எல்லோருக்கும் உணவு, உடை, உறைவிடம் கிடைக்கவில்லையே!

நேரு: அது எனக்கும் தெரியும்! இப்பொழுதைய மக்களின் நிலை மிகவும் கீழ்த்தரமானது! மிக மிக இழிவானது! வேலையில்லாது ஆயிரக் கணக்கான மக்கள் திண்டாடுகிறார்கள்! இந்திய வருங் காலக் குடிமக்களாகிய குழந்தைகளின் நிலையைக் கூறவே கூசுகிறது!

நான்: "அப்படியானால் அன்றிருந்த வெள்ளையன் ஆட்சியிலிருந்ததைவிட இன்று உங்கள் ஆட்சியில் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்!" என்பதைத் தாங்களே ஒப்புக்கொள்கிறீர்கள்!

நேரு: உண்மையை ஒப்புக்கொள்ளாமல் வேறென்ன செய்வது? ஆனால் 370 மிலியன் மக்கள் இந்தியாவில் இன்றிருக்கிறார்கள்! 370 மிலியன் மக்கள்—இவர்கள் யாவரையும் உயர்த்த வேண்டும்! இதை மாயமாகவோ, "மாஜிக்" மூலமோ சாதிக்க இயலாது! மந்திரங்களை முணுமுணுப்பதின் மூலமும் சாதிக்க இயலாது! அல்லது வானத்தை நோக்கி நட்சத்திரங்களைப் பார்த்து ஜோதிடம் பார்ப்பதின் மூலமும் நாம் முன்னேற இயலாது!

நான்: அப்படியா?...ஆனால் சங்கராச்சாரியார், "பரமசிவனுக்கு பாலாபிஷேகம்" செய்வதின் மூலமும் பூஜைகள் செய்வதின் மூலமும் எவ்வளவோ சாதிக்கலாமெனக் கூறுகிறாரே!

நேரு: அதெல்லாம் வீண்! உணவுப் பஞ்ச காலத்தில் உணவுப் பொருள்களை அப்படியெல்லாம் வீணாக்கக்கூடாது!

நான்: சரிதான் நேருஜி! நீங்கள் அசல் தி. மு. க தான்! இப்படியெல்லாம் வெளியிலே கூறினால் மறுபடியும் யாராவது ஒரு இந்து பக்தர் உம்மீது வழக்குத் தொடுத்து விடுவார்! குதிரையும் பசுவும் ஒன்றுதானெனக் கூறிவிட்டு நீர் பட்டபாடு போதாதா?

நேரு: உண்மையிலேயே காங்கிரசின் இலட்சியங்கள் உயர்ந்ததுதான்! உழைக்க வேண்டும்! உழைப்பவர்கள் நாட்டில் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும்! எல்லோருக்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு சமமான வாய்ப்பளிக்க வேண்டும்! செல்வம் திரட்ட வேண்டும்! திரட்டிய செல்வத்தைக் காப்பாற்றி, எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும்!

நான்: அதிலேதான் தென்னகத்து மக்கள் வெகுண்டெழுந்திருக்கிறார்கள்!

நேரு: இந்த "வடக்கு—தெற்கு" கோஷமே எனக்குப் பிடிக்காத ஒன்று! இமயம் முதல் குமரி வரை ஒரு நாடு! வடக்கு முன்னேறினால் என்ன? தெற்கு தாழ்ந்தால் என்ன? வடக்கு வாழ்கிறதென்றால் அந்தப் பெருமை உங்களுக்கில்லையா? இங்கே பெட்டிகள் செய்து வடக்கே அனுப்புகிறீர்கள்! இங்கே நீங்கள் செய்யும் பெட்டிகள் எல்லாம் பிராட்கேஜ் பெட்டிகள்! அதற்குப் பதிலாக நாங்கள் இன்ஜின்கள் அனுப்புகிறோம்!

நான்: இங்கேதான் பிராட் கேஜ் அதிகமில்லையே! இங்கு பிராட் கேஜ் பெட்டிகள் மட்டும் தயாரிக்கப்படுவானேன்? தொழிற்சாலை இங்கே நிறுவினாலும் அது வடக்கிற்கு நலமளிப்பதற்குத்தானா?

நேரு: வாயை மூடு! அதிகப்பிரசங்கி! குறுகிய புத்தி படைத்தவனே! இந்தியாவின் முன்னேற்றத்திற்காகத்தானே திட்டங்கள் தீட்டியுள்ளோம்! வெளிநாட்டுதவியை நம்பித் திட்டம் தீட்டினோம்! ஆனால் அவர்கள் உதவ முன்வரவில்லை! எனவேதான் இன்னும் அதிக வரி விதிக்கப் போகிறோம்!

நான்: வரி செலுத்த மக்களிடையே பணமில்லையே!

நேரு: குறைத்துச் சாப்பிடுங்கள்! வரி செலுத்துங்கள்! அப்பொழுதுதான் இந்தியா முன்னேறும்! இன்னல்கள் அதிகமாகத்தான் இருக்கிறது! அதற்காக நம்பிக்கையை இழக்க இயலுமா? சட்டம் மூலம் சமத்துவத்தை உண்டாக்க இயலுமா? ஒருவர் மிக நெட்டையானவர், ஒருவர் குட்டையானவர்—இவர்களையெல்லாம் சட்டம் இயற்றுவதின் மூலம் சமமானவர்களாகச் செய்ய இயலுமா?

நான்: அப்படி யார் கூறியது?, எத்தனைச் சட்டம் போட்டாலும் கொழுத்த காங்கிரஸ்காரர்களின் தொந்தியைக் கரைக்க இயலுமா என்ன? ஆனால் சட்டம் மூலம் பணத் தொந்திகளை மட்டும் கரைக்கலாமே! எல்லோருக்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு சமமான வாய்ப்புகள் இன்னும் வழங்கப்படவில்லையே! பணக்காரன் மேலும் மேலும் பணக்காரனாகிறான்! ஏழை ஏழையாகவே இருக்கிறானே!

நேரு: அதெல்லாம் உடனே உண்டாக்க இயலுமா? மூன்றாவது திட்டம் வரப்போகிறது! அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைவிடப் பெரியது! எனவே வரிகளும் அதிகமிருக்கும்! அது முடிந்தவுடன் பாருங்கள்! தேனும் பாலும் ஓடும்! ஆனால் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்! "வடக்கு-தெற்கு" என்று கூறி ஒற்றுமையைக் குலைக்கக் கூடாது!

நான்: அப்படியா? மிகப்பெரிய மூன்றாவது திட்டமா? இன்னும் ஏராளமான வரிகளா? திட்டம் நிறைவேறினவுடன் தேனாறு ஓடுவது ஒருபுறமிருக்கட்டும் தேவா! ஆனால் அதற்குள் தென்னகத்தவர்களில் பாதிபேர் அழிந்து விடுவார்களே!

நேரு: நல்லது! மக்கள் தொகை குறையுமல்லவா? பிறகு என் ஐந்தாண்டு திட்டங்கள் தடையின்றி வெற்றி பெறும்!

நான்: அப்படியானால் ஓர் குண்டைப் போட்டு எல்லோரையும் அழித்து விட்டு உங்கள் திட்டங்களை நிறைவேற்றுங்களய்யா! அடராமா! மக்கள் மடிகின்றனர்! மேலும் மேலும் வரியாம்! பெரிய பெரிய திட்டமாம்! திட்டத்தின் முடிவில் தேனாறு ஓடுமாம்! கலியுக ராமரே! உங்கள் ராம ராஜ்யத்தின் விந்தைகள் இவ்[illegible]தானா? இன்னும் இருக்[illegible]

—"இன்பபுரி[illegible]

## "சந்தேகக் கழகத்தார்"

"நாம் கிளர்ச்சி செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அதன் பிறகு திராவிடர் கழகத் தோழர்கள் என்ன சொல்லுவார்கள்? 'பெரியாரை சனவரி 26-ந் தேதியே விடுதலை செய்வதற்கு இருந்தார் காமராசர்; அந்தப் பாவிகள் கிளர்ச்சி செய்து காரியத்தைக் கெடுத்துவிட்டார்கள்' என்பார்கள்.

"வேண்டாத பெண்டாட்டி கால்பட்டால் குற்றம்—கை பட்டால் குற்றம்; சிரித்தால் குற்றம்—அழுதால் குற்றம் என்றால், என்ன செயவது? கணவனுக்கு அவள் நெய்யை அதிகம் ஊற்றினால், 'அய்யோ, இவ்வளவு நெய்யையூற்றி சாமானைப் பாழாக்குகிறாளே' என்பதும், நெய்யைக் குறைத்து ஊற்றினால், 'கணவனுக்குக்கூட நெய்யூற்ற மனமில்லையே இவளுக்கு என்று குற்றங் காணுவதும், சந்தேகப்படுவதும் போல் நான் எதைச் செய்தாலும் சந்தேகத்துடன் பார்த்தால் நான் எங்கே போவது?

—அறிஞர் அண்ணா




வெள்ளி 27-12-57 சென்னை

# இவரா பொறுப்பானவர்?

"இந்தி வேண்டாம்; ஆங்கிலமே வேண்டும்!"

—இப்படிக் கோரிக்கை கிளப்புபவர்கள் யார்?

ஆங்கிலேய தாசர்கள்; 'வெள்ளைக்காரனுக்கு பூட்ஸ் நக்கிகள்'; இந்திய சுதந்திர இயக்கத்தின் எதிரிகள்—என்றெல்லாம் தூற்றப்பட்டு வந்தவர்கள்தானு பழைய பாசத்தின்மீது தாங்கள் பெற்ற பதவி பட்டங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக அப்படிக் கோரிக்கை எழுப்புகிருர்கள்!

இல்லை; இல்லை. இந்தியாவின் மாஜி கவர்னர் ஜெனரல் ராஜகோபாலச்சாரியாரே அந்தத் தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிருர்.

மற்றும் தென்னகத்தின் பிரமுகர்களில் முக்கியமானவர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஆட்சி மொழி மாநாட்டிலே கலந்து கொண்டிருக்கின்றனர்.

'இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படக் கூடாது; இதுபோல, ஆங்கிலமே தொடர்ந்து நீடித்தாக வேண்டும்; இதற்காக, தேவையான அரசியல் சட்ட மாறுதல்களையும் செய்தாக வேண்டும்'—என்று அவர்கள் நிறைவேற்றி இருக்கும் தீர்மானத்தைப் படிக்குங்கால் நமக்கு வள்ளுவரது குறட்பாதான் நினைவிற்கு வருகிறது.

"சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது"

அஃதாவது, ஆராய்ந்து எண்ணுவதற்கு எல்லை துணிவு கொள்வதே ஆகும்; அவ்வாறு கொண்ட துணிவு காலம் தாழ்த்து நிற்பது குற்றமாகும்.

ஆனுல் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு தீர்மானம் கொண்டு வந்த ஆச்சாரியாரைப் பொறுத்த வரையில் அவர் வள்ளுவனுர் குறிப்பிட்ட, காலந் தாழ்ந்து உணர்வு வரப் பெற்ற மாபெரும் குற்றத்துக்கு ஆளாகிவிட்டவராகத்தான் தோன்றுகிருர்.

'பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்' இருந்த காலத்தில் அவர் இந்தியைக் கண்டு மூத்து நகை பூத்து; முகமன் கூறிடும் மூர்க்கத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்.

அந்தோ! இன்றுதான் அவர் புத்தறிவு பெற்றிருக்கிருர்; இறுதிக் காலத்தில்தான் 'இந்தி வேண்டாம்' என்று அலறுகிருர்.

அன்று அவர் பேசிய பேச்சுகளிலும் புதுத் துணிவு தோற்றமளிக்கிறது.

"இந்தியை ஆட்சி மொழியாக்கினுல்தான் அது வளர்ச்சி அடையுமென்பது வட இந்தியாவில் உள்ளவர்களின் வாதம். அவர்களின் பிரமையைப்போக்க நாம் போராட வேண்டும்"

—இப்படிப்பட்ட 'பொன்மொழிகளை' யெல்லாம் அவர் உதிர்த்திருக்கிருர்.

வரவேற்பாளர் திரு இரத்தினசாமி அவர்களது கருத்து நிறைந்த சொற்பொழிவும் நமது கவனத்தைக் கவர்கிறது:

ஆட்சி மொழிக் கமிஷனின் அறிக்கையில் ஆங்கிலம் பொது மொழியாயிருப்பதை எதிர்த்துக் கூறப்படுவதாவது, அது 90 சத வித மக்களுக்குப் புரியாது—என்பதாகும். ஆனுல் நாம் கேட்கிருேம்—நூற்றுக்கு எண்பது பேராக இருக்கும் எழுத்தறிவில்லாதவர்களைக் கொண்டு; இந்தி பேசப் படுகிற பிராந்தியங்களில் உள்ள 20 சத விதம் பேரையும் இந்தி பேசப்படாத பகுதிகளில் உள்ள 5 முதல் 10 சதவிதம் வரையுள்ள இந்தி தெரிந்தவர்களையும் வைத்துக் கொண்டு மட்டும் இந்தி மொழியில் இந்த நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியுமா? அப்படி நிர்வாகத்தை நடத்தினுல் மட்டும் அது பெரும்பான்மையோருக்குப் புரியும் மொழியாக இருக்குமா?

★

அதோடு கமிஷன் உறுப்பினர்கள் உலகில் வேறு எந்த நாட்டிலும் ஒரு அன்னியமொழி வேருெரு நாட்டுக்கு ஆட்சிமொழியாக இருக்கவில்லை என்று கூறுகிருர்கள். ஆனுல் 18-ம் நூற்ருண்டின் மத்திய காலம்வரை உலகெங்கிலும் லத்தீன் மொழிதான் அலுவலக யாதாஸ்துகளைத் தயாரிக்கும் மொழியாக இருந்திருக்கிறது; வெளி விவகார யாதாஸ்துகள் அனைத்தும் பிரெஞ்சு மொழியில்தான் தயாரிக்கப்பட்டு வந்திருக்கின்றன."

—இதுபோன்ற அரிய கருத்துக்களையெல்லாம் வெளியிட்டிருக்கிருர்.

அப்போதுதான் அன்பர் ஆச்சாரியாரும் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிருர்:

"நமக்கு ஒரே நண்பர் பிரதம நேருதான். நம் உண்மை நிலையை அவர் உணரும்படிச் செய்ய வேண்டும்."

இந்தி மொழி பேசும் அவ்வளவு பெரிய வடநாட்டில் நேரு ஒருவர்தான் நண்பராம்!

அவ்வளவு பெரிய ஆச்சாரியார் கண்களுக்கே ஒரே ஒருவர்தான் தென்பட்டிருக்கிருர்!

ஆனுலும் அந்த நண்பரோ கரடியைக் கண்டு மரத்தில் ஏறிக் கொண்ட போலி நண்பர் போலத்தான் தோற்றமளிக்கிருர். என்பதை நம்மால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

தென்னகத்தின் பிரமுகர்கள் பலர் ஒன்று சேர்ந்து மாநாடு கூட்டி, ஜனநாயக முறையில்; நாகரிக முறையில்; ஒழுக்கக் கேட்டிற்கு ஒரு அணுவும் பழுதேற்படாமல்; உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல்; இந்தியாவின் ஒரு யோக்யமான பிரஜை எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படியெல்லாம் நடந்து தீர்மானம் தீட்டியிருக்கிருர்கள்.

அந்தத் தீர்மானத்தைக் கண்டு பண்டித நேரு என்ன அபிப்பிராயம் தெரிவித்திருக்க வேண்டும்?

'நண்பர் நேரு'வாக அல்ல; 'எதிரி நேரு'வாக இருந்தாலும் நாகரிக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாட்டின் பிரதமர் என்கிற முறையில் அவர் கூறியிருக்க வேண்டியது என்ன?

இது பிடிக்காவிட்டால் அதை அவர் கௌரவமான முறையில்; தக்க காரணங்களை எடுத்துக் காட்டி தனது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கலாம்!

ஆனுல் பண்டிதரோ இந்தி திணிக்கப்படுவதாகப் பேசப்படுவதே முட்டாள்தனம் என்று கூறியிருக்கிருர்!

—பாவம்; அதிகாரத் திமிரும் ஆணவச் செருக்கும் சேர்ந்து கொண்டால் சில பெரியவர்கள்கூட சிறுமதியாளர் நிலையிலே 'சந்து முனை சிந்து' பாடுவதை நாம் பார்த்திருக்கிருேம். பண்டிதரும் அந்தப் பதவிப் போதையில் நிதானமிழந்து தவிப்பவராகத்தான் புலப்படுகிருர்!

அவர் சிறிதும் நாவடக்கம் இன்றி; தடித்த நாவால் எதையும்—எவரையும்—எப்போதும்—'முட்டாள்'; 'முட்டாள்தனம்' என்று கூறிவருவதை நோக்கும்போது, திராவிடக் கழகத்தினர் கூறிவருவதுபோல நேரு படத்தைப் பொதுமக்கள் அனைவருமே இழிவுபடுத்த முன்வந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை—என்றுதான் கூறத் தோன்றுகிறது! ஃ

## "விடுதலை"யின் விபரீத புத்தி!

★

"காஞ்சிபுரம் முதலியார் காமராசரை எதிர்ப்பதுபோல் நடித்துக் கொண்டு அந்தரங்கத்தில் அவருடன் உறவாடி வருவதாகவும்—இதனுலேயே அவரது கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும்......"

என்று ஒரு செய்தியை சரடு திரித்து 'விடுதலை' என்ற ஏடு 23—12—57ந் தேதி எழுதிவிட்டு, அடுத்த வரியில் அதே ஏடு முன்னுக்குப் பின் முரணுக,

"அவர் மட்டும் (அண்ணுதுரை மட்டும்) பார்ப்பனரை ஆதரித்து வருவதை அவரைச் சேர்ந்தவர்கள் வெறுப்பதாகவும் நம்பத் தகுந்த செய்தி கிடைத்திருக்கிறது"

என்று எழுதியிருக்கிறது.

கூவம் நதியில் பேனுவைத் தோய்த்து எழுதும் இந்த நண்பர், தான் எழுதிய வாசகங்களே ஒன்றுக்கொன்று முரணுக இருப்பதை ஏனே கவனிக்க மறந்தார்.

காமராசருடன் அந்தரங்கத்தில் உறவாடுவதால் கட்சியில் பிளவு என்கிருர். பார்ப்பனரோடு உறவாடுவதால் கட்சியில் பிளவு என்கிருர். இதில் எது சரி என்பதையாவது—அல்லது கட்சியில் பிளவு என்பதையாவது "மன்னிப்புப் போராட்டம்" நடத்துகிற இந்த மாவீரர்கள் அறிவிப்பார்கள் என்று திராவிடர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

# ஆட்சிக் கொலுவிருக்கும் அருள் ஜோதிப் 'பிரகாசங்கள்'!

இந்தியத் துணைக் கண்டத்தை ஆளும் பொறுப்பு அகில இந்திய காங்கிரசுக் கட்சியினரிடம் வந்த பிறகு ஆட்சிக் கொலு எத்தனையோ பல அதிசய மனிதர்களையும், விசித்திர சித்தர்களையும் சந்தித்திருக்கிறது. அவர்களுள் ஒருவர்தான் முன்னாள் டில்லி அமைச்சராகவும், சென்னை ஆளுநராகவும் பணியாற்றி, இந்நாள் பம்பாய் ஆளுநராகப் பணி புரியும் திரு. பிரகாசா அவர்கள். உள்ளத்தில் சரியென்று பட்டதை உரைத்திடும் வன்மை பெற்றவர். 'வில்லில் கயல் இணைந்த விந்தைக் கருவிழி' மாதர்களைக் கண்டால் தன்னை மறந்திடுவார். தன்னிலையும் பிறழ்ந்திடுவார். முன்பொரு முறை, 'மறு பிறப்பில் கோளப் பெண்ணாகப் பிறக்க விரும்புகிறேன் நான்' என்று அவர் சொன்னதை நாடு மறக்கவில்லை. சென்னை மாநிலத்துக்கு முன்பு வந்திருந்த சீன கலாச்சார மகளிர் தூதுக் குழுவினரிடம், "மனைவியை இழந்த நானும், மணமாகாத காமராசரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இந்த மாநிலத்தில் அதிக நாள் தங்காதீர்கள்!" என்று கூறி வழியனுப்பி வைத்த 'பெருந்தகை' அவர். இது போல், வேடிக்கையாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு அவர் பல வேதனை தரும் செய்திகளையும் வெளியிட்டுள்ளார்.

சென்ற பொதுத் தேர்தலின் போது மக்கள் திட்டமென்று கூறப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தை கட்சித் திட்டமாகவும், இந்திய துணைக் கண்டத்துக்குப் பொதுவான காஷ்மீர் பிரச்சினையை கட்சிப் பிரச்சினையாகவும் மாற்றி தேர்தல் களத்தில் காங்கிரசுக் கட்சியினர் திக் விஜயம் செய்தனர். ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிப் பேசாத மேடைகளோ, பிரபந்தம் பாடாத ஏடுகளோ அரசாங்கத்திடமும், ஆளுங் கட்சியினரிடமும் இல்லை. "இந்திய மக்களையும் இந்தியாவையும் சுபீட்சமுறச் செய்வதற்கான ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. பற்பல சமூக நலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. சிற்சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். சில தடவைகளில் நாடு தடுமாறியிருக்கலாம். ஆயினும் இன்று நாட்டிலுள்ள முப்பத்தேழு கோடி மக்களும் சரித்திர பூர்வமான பெரும் யாத்திரையைத் துவக்கியிருக்கிறார்கள்" என்று டிசம்பர் 9-ம் நாள் காலை திருச்சியில் பண்டிதர் நேரு பேசியுள்ளார். ஐந்தாண்டுத் திட்டத்தை சரித்திரப் பூர்வமானயாத்திரையாக வர்ணிக்கிறார். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி காங்கிரசுக் கூடாரத்திலுள்ளேயே மாறுபட்ட அபிப்பிராயங்களும், தெளிவற்ற எண்ணங்களும் நடமாடுகின்றன.

ஆசியாவின் ஜோதி அகில உலக சுற்றுப்' பிரயாணம் செய்கின்ற பொழுது வெளிநாடுகளிலே அவ்வப்போது காணுகின்ற புதுமைகளையெல்லாம் இந்த நாட்டிலும் காணவேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார். அதன் விளைவுதான் இந்த பிரம்மாண்டமான ஐந்தாண்டுத் திட்டங்கள்! ஆசியாவில் பெரிது; அகில உலகில் பெரிது என்று சொல்லிக் கொள்ள பீகாருக்கு ஒரு சிந்திரி—வங்கத்துக்கு ஒரு சித்தரஞ்சன்—பம்பாய்க்கு ஒரு டிராம்பே—பஞ்சாபுக்கு ஒரு பக்ரா நங்கல் என்று திட்டங்கள் அமைந்திருப்பதிலே அவருக்கு ஒரு மகிழ்ச்சி. இந்த திட்டங்களைப்பற்றி டிசம்பர் 16-ம்நாள் மத்தியப் பிரதேச காங்கிரசுக்காரர்கள் விவாத அரங்கில் செய்திப் போக்குவரத்து டில்லி அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள். "முன்னேற்றமடைந்துள்ள மற்ற நாடுகளைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றக் கூடாது. நாட்டின் தேவைகளுக்கும் சக்திகளுக்கும் ஏற்ப அபிவிருத்தித் திட்டங்களை அமுல்நடத்த முயற்சி செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளார். நெஞ்சிலே துணிவில்லாத சிலர் இவர் போல் உண்மையைச் சொல்ல அஞ்சி வாழுகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டம் என்றாலே என்னவென்று தெரியாதவர்களும் இந்திய ஆட்சிப் பொறுப்பில் இடம் பெற்றுள்ளார்கள் என்றால் வெளியுலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

"ஐந்தாண்டுத் திட்டம் என்று அட்டையில் பொறிக்கப்பட்ட ரொம்பவும் கனமான புத்தகங்கள் எனது மேசையில் கிடக்கின்றன. ஆனால் ஒருபோதும் அவைகளைப் படிக்க எனக்குத் துணிவு ஏற்படாத அளவுக்கு அவைகள் பெரிய புத்தகங்களாக இருக்கின்றன. யாராவது என்னிடம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பேசும்போது அதைப் பற்றி எல்லாம் தெரிந்தவன்போல் தான் நடிக்கிறேன். ஆனால் இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்பதை உங்களிடம் சொல்கிறேன். ஏனெனில் இதை ரகசியமாக நீங்கள் வைத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியும்"

என்று நவம்பர் திங்கள் 28-ம் நாள் சென்னையில் நடைபெற்ற இந்திய மகளிர் கழகத்தின் நாற்பதாவது மாநாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாத அரங்கில் பம்பாய் ஆளுநர் திரு. பிரகாசா அவர்கள் கூறியுள்ளார். அவர் பேசிய இடம் அரிவையர் வாழும் ஔவை விடுதி. அதனால்தான் தன் இதயத்தின் அடித்தளத்தில் பதிந்து கிடந்த உண்மையைத் தன்னை மறந்து வெளியிட்டுள்ளார் போலும். உண்மையைக் கூறிய அந்த உத்தமரை நாம் வாழ்த்தத்தான் வேண்டும். ஆனால் இன்னும் எத்தனையோ பேர் உண்மை புரியாமலும் உள்ளதைக் கூறாமலும் அரசியல் அரங்கிலே இருக்கத்தான் செய்கின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிக் குறை கூறுகிறவர்களைக் குறித்து அண்மையில் இந்திய நிதியமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் "படித்தவர்கள்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறை கூறுகிறார்கள்" என்று கருத்தறிவித்துள்ளார். இந்

[தொடர்ச்சி பக்கம்—10]

## என்னே தாராளம்!



டி. டி. கே. சில பொருள்களின்மீது உள்ள விற்பனை வரியை நீக்கிவிட்டு; சுங்க வரி விதித்து; வருவாயைப் பெருக்கிக் [illegible]டிருக்கிறார்—அதாவது இப்போது அவர் உட்கார்ந்து கொள்வதற்குப் பஞ்சணையும் கிடைத்திருக்கிறது!

(படம்: 'சங்கர்ஸ் வீக்லி').




3

## அன்புள்ள பொன்முடி!

தில்லியிலிருந்து தோழர்கள் நீட்டியுள்ள மடல் ஒன்றினை நீ படிக்க வேண்டும் எனபதற்காக இத்துடன் இணைத்துளளேன். அதைப் படி—அதன பிறகு பயணத்தைத் தொடரலாம்.

"அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். கீழே தரபபட்டுள்ள செய்திகளைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதோடு, சட்டசபையிலும் இதுபற்றி விவாதிக்க வேண்டுமெனக்கேட்டுக் கொள்கிருேம். இந்தத் தில்லை நகரிலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவில் வக்காரமாரி என்ெருரு சிறு கிராமம் உள்ளது. அக்கிராமம் சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏறபடுத்தபபட்டுள்ள தேசியக் குடிதண்ணீர் சுகாதார திட்டத்தில் சேர்க்கபபட்டுள்ளது இந்தத் திட்டத்தின் நோக்கமெனக் கூறப்படுவது சிதம்பரத்தைச் சூழ்ந்துள்ள கிராமங்களில் தொத்து வியாதிகள் பரவாமல் தடுத்து குடிதண்ணீர் முதலிய வசதிகளைச் செய்து கொடுபபதென்பதாகும். இந்தத் திட்டத்தின் கீழ் 30—11—57 சனிக்கிழமையன்று குடிதண்ணீர் வசதிக்காக Department of Industries and Commerce ஆல் கொடுக்கப்பட்ட Hand boring set ஆல் ஒரு குழாய்க் கிணறு தோண்டப்பட்டது. சுமார் நாற்பத்தெட்டு அடிகள் தோண்டும் போது தண்ணீர் வருவதுபோல் பூமிக்கடியிலிருந்து சத்தம்கிளம்பியது. தண்ணீர் வருவதாக நம்பி மேலும் தோண்டப்பட்டது. பிறகு bore Shell—ஐ வெளியில் எடுத்துப் பார்த்ததில் வெள்ளை நிறங் கொண்ட உலோகத்தாது அப்ரகம், மைகா ஆயில் கலந்த மண் கிடைத்தது. மீண்டும் 48 அடியிலிருந்து தோண்ட ஆரம்பித்ததும் முன் கேட்டதைவிட பலத்த சத்தம் கேட்க ஆரம்பித்தது. boring Shell-ஐ எடுத்துப் பார்த்ததில் அதிக உலோகத் தாது கலவை இருந்தது. மேலும் தோண்ட bore Shell-ம் boring Rod ம் ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. இப்போது bore Shell—ஐக் கையில் பிடிக்க முடியாதபடி உஷ்ணமாக இருந்தது. கந்தகம் கலந்த மண்ணிலேயிருந்து பகல் 12மணிக்கு புகை கிளம்பியது. போர் செட் bore Man சந்தேகப்பட்டு ஒரு தீக்குச்சியைக் கொளுத்திக் காட்டினுர். உடனே ஒரு வெடி சப்தம் குழாயிலிருந்து கிளப்பி தரை மட்டத்திற்கு மேல் மூன்றரை அடி உயரம் பகல் இரண்டுமணி வரையில் எரிந்துகொண்டிருந்தது. உடனே தேசியக் குடிதண்ணீர் திட்ட உதவி என்ஜினீயர் அவர்கட்கு தகவல் கொடுக்கப்பட்டு அவரும் சென்று நேரில் பார்த்தார். பார்த்தவர், அந்த இடத்தை மூடிவிட்டு வேறு இடத்தில் bore போடச் சொல்லிவிட்டு செய்தியை வெளியில் சொல்லக் கூடாதென்றும் சம்பந்தப்பட்டவர்கள் அதனை டைரியில் எழுதக் கூடாதென்றும் கட்டளையிட்டுச் சென்று விட்டார். மாவட்ட கலெக்டருக்கும், தலைமைக் காரியாலய Excecutive என்ஜினீயர் அவர்கட்கும் முக்கியமாகத் தெரிவிக்க வேண்டியிருந்தும் அவர் அதை செய்ய மறுத்து விட்டார். இதன் மர்மம் புரியவில்லை. அவர் சித்தூர் ஜில்லாவில் பாக்கர்லா என்னும் ஊரைச் சார்ந்த ஒரு ஆந்திரப் பிராமணர். அதனுல்தானே என்னவோ தமிழ் நாட்டில உலோக வகைகள் கிடைப்பதை அவர் விரும்பவில்லையென்று நாங்கள் யூகிக்க வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு நல்ல வாய்ப்பை யாருக்குமே தெரியாமல் மூடி மறைத்துவிட்ட இந்த பிராமண அதிகாரி, தமிழ் நாட்டுக்குத் தேவைதானு? முடிவைத் தங்கள் கையில ஒப்படைத்துவிட்டு எங்கள் கடமையை முடித்துக் கொள்கிருேம்"

படித்தாயா நண்பா — கடிதத்தை!......தமிழ்த் தாய் தன் வயிற்றிலேயிருந்து உணவு மட்டுமலல; பொன்னும் இரும்பும் நிலக்கரியும உலோகச் சத்துக்களும் தன் பிள்ளைகளுக்குப் பயன்படட்டும் என்று வழங்கிக் கொண்டேயிருக்கிருள். அதனைத் திறம்படச் சேர்த்து நலம் பெறவும் நாடு வளம் பெறவும் கூடிய முயற்சிகளைச் செய்திடக் கடமைப்பட்டுள்ள அரசு நம்மிடையே இல்லை! பொறுப்பற்ற ஆட்சி—பொறுப்பற்ற அதிகாரிகள்!......

## நீட்டோலை

### கருணாநிதி

ஏழைப் புலவனின் எழிற் காவிய மொன்றைப் படித்து மகிழ்ந்த மன்னன், "எமது அன்பளிப்பாக இதோ இந்த யானையினைப் பரிசாக அளிக்கிறேன்—வளர்த்திடுக!" என்று கூறிஞல், ஏழைப் பாவலன் மகிழுவா முடியும்? பரிசு மதிப்பு வாய்ந்தது தான்! ஆனுல் யானையைக் கட்டி தீனிச் செலவு செய்யப் பணம் வேண்டாமா?

அதைப் போலத்தான் தமிழ் நாட்டு அரசு, ஏழைக் கவிஞன் நிலையிலே ஏங்குகின்றது. அரசன் பரிசாகத் தந்திட்ட யானையைப்போல், தமிழ்த்தாய், சேலத்தை, நெய்வேலியை, இதோ வக்காரமாரியைத் தந்திடுகின்ருள். அங்கே திட்டங்களை நிறைவேற்றத் திராணி வேண்டாமா? பொருள் வேண்டாமா? ஏற்கனவே தருவதாகக் கூறப்பட்ட 35 கோடியிலும் ஐந்து கோடியைக் குறைத்து விட்டது வடநாட்டு அரசு என்ற செய்தி காதினைக் குடைகிறது. அமைச்சர் சுப்ரமணியஞர் அந்த அஞ்சையும் விடாது வாங்கி வரக் கெஞ்சிக் கொண்டிருக்கிருர் தில்லியில் என்ற தகவல் கிடைத்திருக்கிறது! தில்லியில் சுப்ரமணியம்! தில்லையில் அப்ரகம், மைகா ஆயில் மண்! இப்போது எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது பிரச்சினை; பார்த்தாயா—தில்லையில் கிடைக்கும் உலோக சத்துக்களைப்பெற தில்லியின் தயவு. வேண்டியிருக்கிறது.

அமெரிக்காவுக்குப் போன பெரிய நிதியமைச்சரைப் போலவே நமது நிதி அமைச்சரும் விரித்த கையுடனும், வியர்த்த மேனியுடனும், வேதனை வெளியே தெரியா முக பாவத்துடனும் சென்னை வந்து சேருவார். சக அமைச்சர்களிடம் தில்லியின் ஓரவஞ்சனையை எடுத்துக் கூறுவார். அந்தத் தி. மு. க. சொல்லுவது சரிதான் என்று மந்திரிகள் அங்கலாய்த்துக் கொள்வர். வடக்கை சபிப்பர். வஞ்சகர் என வசைமாரி பொழிவர். சட்ட மன்றத்திற்கு வருவர். நாம், ஐந்து கோடி ரூபாய் திட்டத்தில் வெட்டப்பட்டதை எடுத்துக்காட்டி "வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது!" என்போம். உடனே சுப்ரமணியம் எழுந்து, "இதெல்லாம் வரட்டுக் கூச்சல். வடக்கு நம்மைப் புறக்கணிக்கவில்லை. வீண் துவேஷத்தைக் கிளப்பாதீர். நமக்கு இந்த ஆண்டு முப்பது கோடி போதும்! எல்லா மாகாணங்களுக்கும் இது போலத்தான்! இதில ஏற்றத் தாழ்வில்லை!" என்று நம்மீது பாய்ந்து காங்கிரஸ் உறுப்பினர்களின் கைதட்டலைப் பெறுவார். சென்னை மாகாணம், பின் தங்கிய மாகாணம் அதனுல் தனிச் சலுகை வேண்டுமென தில்லியில் முழக்கிய அமைச்சர், சென்னை வந்ததும், பெற்ற தோல்வியையும் மறந்து நமது கழகத்தைக் காயும் முயற்சியில் முனைந்து நிற்பார். நிலைமை இதுவானுல் வக்காரமாரிகள் எப்படிக் கவனிக்கப்பட முடியும் என்பதை நீயே எண்ணிப் பார்!

இதனை நாம் எடுத்துரைத்தால எல்லாக் கட்சியினரும் சீறுகின்றனர். காங்கிரசார் குறுகிய நோக்கம் என்கின்றனர். அவர்களில் சிலர் நம்மைப் பேசுகின்றனர்; சிலர் ஏசுகின்றனர். சிலர் என்ன செய்கிருர்கள் என்றே தெரியவில்லை. அவர்களின் மாபெருந் தலைவர் நேரு அவர்களோ கீழப்பாக்கத்திலேயிருந்து கிளம்பி, திருச்சி, திண்டுக்கல் வரையிலே திராவிட நாடு பிரச்சினைபற்றிய தீப்பொறி பறக்கும் கண்டனத்தைத் தெரிவித்து [illegible] போய் விட்டார். [illegible]

[தொடர்[illegible]

பொங்கல் மலரில்...

தலையாலங் கானத்தான்
[வரலாற்றுக் கதை]

நெடுஞ்செழியன்
[சிறு நாடகம்]

வாலிமன்னன்
[கவிதை வரிகள்]

தப்பவில்லை!
[சிறுகதை]

இத்தனையும் கருணாநிதி எழுதுகிருர்.




1

வழக்கம்போலவே வேப்ப மரத்து மேடையிலமர்ந்து புல்லாங்குழல் ஊதிக்கொண்டிருந்தான் சுருளிமலை.

காலை நேரங்களில் அந்த மேடை அவனுக்கு மட்டுமே சொந்தம். மாலை நேரத்தில் ஊராருக்கு அதுவே காற்று வாங்குமிடமும் பொழுது போக்குமிடமும் ஊர்வம்பு பேசுமிடமுமாகும். இன்றியமையாத சமயங்களில அந்த மேடையில தான் ஊர்ப் பஞ்சாயத்து நடைபெறும். ஆண்டுக்கொரு முறை நடைபெறும் அம்பு போடும் உற்சவத்தின்போது குதிரை வாகனத்தின்மீது சாமியை அலங்கரித்து அங்கேதான் கொண்டு வந்து இறக்கி பூஜைகள் நடத்துவார்கள்.

இப்படி ஊருக்கு மிக சிறப்பான வேப்ப மரத்தடியில் காலை நேரப் பொழுதை சுருளிமலை கழித்து வந்தான். செழித்து வளர்ந்த அந்த வேம்பு, ஒரு விதவை! ஆமாம்; திருமணமான அடுத்த இரண்டொரு நாட்களிலேயே வேம்பின் கணவன் அரசு, பட்டுப் போய்விட்டான்! அரசில்லாத வேம்பு, தன்னந்தனியாக வளர்ந்து சுருளிமலையின் குழலோசையைத் தினந்தோறும் சுவைத்துக் கொண்டிருந்தது. அதன் உடலிலும், கிளையிலும், இலையிலும், காயிலும், பூவிலுமுள்ள கசப்புகூட மறைந்து போயிருக்கும் எனக் கற்பனை செய்தால் அது மிகையாகாது; அவ்வளவு இனிப்பான இசையை அது பருகியிருக்கிறது! மரம், செடிகள் சுவாசிக்கின்றன என்பதைக் கண்டு பிடித்தான பிறகு, அவைகள் ஒலியைக் கேட்கவும் செய்கின்றன வென்று யாராவது ஒருவன் ஆராய்ச்சி முடிவை அறிவிக்காமலா இருக்கப் போகிறான்—என்ற எண்ணத்தாலோ என்னவோ—சுருளிமலை, வேம்படியில் வேய்குழலில் தன்னை மறந்து மூழ்கி விடுவான். இசைவாணர்கள், குழலோர், இசைக்கென அமைத்துக் கொண்ட இலக்கணம் பற்றிய அரிச்சுவடியே அவனுக்குத் தெரியாது.

"வார நிலத்தைக் கேடின்று
வளர்த்து, ஆங்கு
ஈர நிலத்தின் எழுத்தெழுத்தாக
வழுவின்று இசைக்கும்
குழலோன் தானும்,"

...று இளங்கோவடிகள், ...ரத்தில் குழலோர் ...இலக்கணச் சிறப்பு ...தை அவன் உணர மாட்டான். சிலப்பதிகாரம்என்றாலே என்னவென்று புரிந்து கொள்ள முடியாத தமிழ் இளைஞன்தான் அவன்.

குயில் கூவுகிறது—மயில் ஆடுகிறது—சிந்து பாடும் அருவியென வர்ணிக்கிறோம். குயிலோ, மயிலோ, அருவியோ இசை இலக்கணம் கற்று சங்கீத இன்பத்தைப் பொழிபவை அல்ல. ஆனாலும் குயிலின் பாட்டை, மயிலின் ஆட்டத்தை மனிதர்கள் தரும் கலை விருந்துக்கு உவமையாக்கி விடுகிறார்கள்; கற்பனையாளர்கள். அது போன்ற ஒரு கவர்ச்சியும், கேட்போரை வயப்படுத்தும் சக்தியும் சுருளிமலையின் குழலோசையிலே இருந்தது!

தாளம் தவறாமல், ராகம்பிசகாமல், சுருதி விலகாமல் ஆந்தை பாடினால் "ஆகா, என்னே இசை இலக்கணம்!" என்று வியப்படைவாருண்டோ? "லயம்" வழுவாத, "பாவம்" நழுவாதவாறு நடனமாடினாலும் வான்கோழியை மெச்சுவாரும் உளரோ?

மயிலுக்கும் குயிலுக்கும் உள்ள இயற்கைச் சிறப்பு, எப்படியோ சுருளிமலையின் குழலிசைக்கும் இருந்தது. குளுகுளுவென வீசும் வேப்பமரத்து மென் காற்றோடு அந்த இனிய நாதமும் கலந்து, காலை நேரத்தில் கழனி நாடிச் செல்வோருக்கும்—உழைப்பு தர ஓடுவோர்க்கும் புதிய தெம்பை அளிக்கும்.

ஒரு சிலர் அவனைப் பார்த்து முணு முணுக்காமல் இல்லை. "பெரிய கிருஷ்ண பரமாத்மா இவரு—கோகுலத்திலே குழல் ஊதுராரு!" எனக் கேலி பேசுகிற பெரிய மனிதர்களிடத்திலே அவன் எப்படி மதிப்புரை பெற முடியும்.

"பொன்னையாவுக்கும் பூஞ்சோலைக்கும் வந்து பிறந்ததே பிள்ளை—குலம், கோத்திரம், குடும்பம் எல்லாத்தியும் மறந்துட்டு குழல் ஊதுது. குழல்!" எனக் கிண்டல செய்தவாறு போகிறவர்களை சுருளிமலை கவனிக்காமலில்லை.

அந்தப் பேச்சுக்களையெல்லாம் அவன் மிக அலட்சியமாகக் கருதினான். அவைகளுக்கெல்லாம பதில் சொல்லி பகையை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லையோ என்னவோ, அவனுண்டு—வேப்பமரம் உண்டு என்ற அளவில் காலங் கடத்தி வந்தான். இள ரத்தம், துடிப்பு நிறைந்த பருவம். இவைகளுக்கு இயற்கையாக இருக்கக் கூடிய பரபரப்பு, படபடப்பு எதுவுமேயில்லை அவனிடம்!

பதினைந்து வயது இளைஞன்—பழுத்த கிழவரைப் போலவே அமைதியாகக் காணப்படுவான். முகத்தின் அழகு, அகத்தின் பிரதிபலிப்புத்தானே- அவனது அமைதி கலந்த ஆழ்ந்த பண்பை உணர்வதற்கு யாருமில்லைதான் அவ்வூரில்! அதனால் சிலர் அவனை சோணிப்பிள்ளையென்றும் அழைத்தார்கள்.

அவன் தவழ்ந்தாடும் பருவத்தில் பல் முளைத்தவுடனே, வீட்டில் பல கொழுக்கட்டை சுட்டு சாமிக்குப் படைத்தார்கள். அப்போதே அவனுடைய குணம் எப்படியிருக்குமென்று அவன் தாய் கண்டு பிடித்து விட்டதாகப் பிறரிடம் பெருமையடித்துக் கொள்வாள். குல தெய்வத்துக்கு நேரே கொழுக்கட்டைப் படையலைப் போட்டு, ஒரு முறத்தில் விளையாட்டுப் பொம்மை, ஒரு ரூபாய் நாணயம், கத்தி, ஒரு கொழுக்கட்டை எல்லாவற்றையும் வைத்து, குழந்தை சுருளியைத் தவழவிட்டு, அவன் அந்தப் பொருள்களில் எதை ஆவலோடு எடுக்கிறான் என்று சோதித்துப் பார்த்தார்கள். குழந்தை தவழ்ந்து கொண்டே போய் கொழுக்கட்டையைத்தான் எடுத்தது. அது முதலே இது சாப்பாட்டுராமனாகத்தான் இருக்குமென்று அக்கம் பக்கத்தாரும், தாயாரும் முடிவு கட்டி விட்டார்கள். அந்த முடிவின் படியே அவனை வளர்க்கவும் தொடங்கினார்கள். அவனும் எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல், எந்தப் பொறுப்பிலும் தன்னை சிக்க வைத்துக் கொள்ளாமல் வளர்ந்தான்.

எப்பொழுதும் புன்முறுவல் பூத்திருக்கும் முகமும் ஆழ்ந்த யோசனையை வெளியிடுவது போன்ற விழிகளும் கொண்ட இளைஞன், என்றும்போல் அன்று காலையிலும் குழலிசையில் தன்னை மறந்து மூழ்கியிருந்தான்.

அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்படும்போது, அவனுக்கு முன் எழுந்து வீடு வாசல் பெருக்கி, தெருவில் கோலம் போட்டுவிட்டு, பானை செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்த அவன் அன்புச் சகோதரி பொன்மணி "சாப்பிடாமல் போகாதே எங்கும்! நல்ல பழையதும், எருமைத் தயிரும், தொட்டுக் கொள்ள கிடாரங்காய் ஊறுகாயும் வைத்திருக்கிறேன். சாப்பிட்டு விட்டுப்போ!" என்றாள்.

"கொஞ்ச நேரம் கழித்து சாப்பிடுகிறேன் அக்காள்!" எனக் கூறிவிட்டு நடந்த அவனைத் தடுத்து, "தம்பீ, கொஞ்சம் இங்கேயே உட்கார்ந்து குழலூதேன்!" என்று அவள் கோரிக்கை விடுத்தாள்.

"அதெல்லாம் முடியாது!" என்று சர்வசாதாரணமாகக் கூறிவிட்டு வேப்ப மரத்தடிக்கு வந்து விட்டான். அங்கே இசை முழக்கம் செய்தான். இடையிடையே வேப்ப மரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டான்.

அப்படி அண்ணாந்தபோது முதல் தடவை அவன் முகத்தில் வியப்பு ஏற்பட்டது!

அடுத்த தடவை சிறு பீதி தலை நீட்டி உடனே மறைந்தது!

மூன்றாவது தடவை அலட்சியமாகப் பார்த்தான்!

பிறகு மேலே நிமிர்ந்து பார்க்கவேயில்லை; குழலூதுவதில் முழுக் கவனமும செலுத்தி விட்டான்!

"ஆகா! பலே! பலே!! பிரமாதம்!" எனக் கைதட்டியவாறே அங்கே வந்தான், தீச்சட்டி சிங்காரம்.

"வாண்ணே! எங்க ரொம்ப நாளாய்க் காணோம்?" என ஆவலுடன் கேட்டான் சுருளிமலை.

"அட போப்பா—அதேயேன் கேக்கிறே? பதினைந்து ஊரிலே தீச்சட்டி ஆட்டம்! எல்லா ஊர்க்காரப் பயலும் தீச்சட்டி சிங்காரந்தான் வேணுங்கிறான்! நான் ஊருக்கென்று ஒருத்தன்; யாருக்கென்று ஆடுவேன்? போய்த் தொலைந்தேன். இன்னைக்குத்தான் திரும்பினேன். ஒரு விஷயம் தெரியுமா தம்பீ; அதுக்குத்தான் உங்க வீட்டைத் தேடிகிட்டு வந்தேன்," எனப் பீடிகை போட்டான் சிங்காரம்.

"எங்க வீட்டைத் தேடிகிட்டு வேப்பமரத்தடிக்கு வந்துட்டீங்களே! அதிருக்கட்டும்; என்னண்ணே விஷயம்?"—சுருளிமலையின் கேள்வியிலேயுள்ள ஆவலைக் கண்டுபிடித்த சிங்காரம் நீண்ட முன்னுரையோடு பேச்சைத் தொடர்ந்தான்.

"காட்டூர் காளிகட்டித் திருவிழாவுக்குப் போயிருந்தேன். அடடா! எக்கச்சக்கமான கூட்டம்—எள் விழ இடமில்லையென்றால் பார்த்துக் கொள்ளேன்!"

சுருளிமலை குறுக்கிட்டு, "என் விழ என் இடமில்லை? ஜனங்கள் தலையிலே விழுந்தா தாங்க முடியாதா என்ன, எள் விழுவதை?" என்று கேட்டதும்.

"அடேய்! குறுக்கே பேசாதே! விஷயத்தைக் கேளுடா தம்பீ! காட்டூர் முடிந்து கனியா

## அடுத்த இதழில்...!

# துரோகி யார்?

அவதூறுக்கு ஆணித்தரமான மறுப்பு!

'நீட்டோலே'யில் காணுங்கள்!

குறிச்சி போனேன். சமயபுரம் போனேன். எல்லா எடத்திலும் ஏகக் கூட்டம்! நம்ப தீச்சட்டி ஆட்டத்துக்கு ஏகப்பட்ட மதிப்பு! நாலு நாள் தொடர்ந்தாப் போலே காலையிலே கப்பரைச் சட்டியைக் கையிலே எடுத்து, பத்து மைல் சுற்றளவுக்கு நடந்தே போய் ஆடணும்னு முடியிற வேலையா? நாலாம் நாள் காலையிலே தீச்சட்டி எடுத்து ஆடிக்கிட்டேயிருக்கும்போது எனக்கு ஒரே களைப்பு! ஒரே மயக்கம்! எதிர்த்தாப்போல ஒரு பெண்ணு—அழகான குட்டி! அவளையே பாத்துகிட்டு என்னை மறந்து ஆடிகிட்டேயிருந்தேன்......" என்று பேச்சை நீட்டிய சிங்காரத்திடம் சுருளிமலை,

"அடடா! என்னண்ணேயிது, எனக்கிட்ட வந்து இதெல்லாம் பேசிகிட்டு......" என்று வெடுக்கென்று பதிலுரைத்து எழுந்தான்.

"சரி, சரி, கேளுடாப்பா...... எப்படியோ ஆடிக்கிட்டு இருக்கும்போது கை தவறித் தீச்சட்டி கீழே விழுந்து சிதறிப் போச்சு! அதோட என் மானமும் போச்சு!"

"தீச்சட்டி உடைஞ்சா மானம் ஏன் போகுது?"

"அட மண்டுப் பயலே! உனக்குத் தெரியாதா? தீச்சட்டியை அவ்வளவு நெருப்போடக் கையிலே தூக்குறோமே; அது கையிலே சுடுறதே இல்லியே— எப்படின்னு நினைச்சுகிட்டு இருக்கே?"

"காளியம்மன் சக்தின்னு நினைச்சுகிட்டிருக்கேன்!"

"என்னுத்த அம்மனோட சக்தியிருந்தாலும் நம்பளோட ஜாக்ரதையும் கொஞ்சம் வேணும் தம்பி!"

"எப்படிண்ணே?"

"தீச்சட்டிக்கு அடியிலே சூடு அதிகமா இறங்காதபடிக்கு பருத்திக் கொட்டையைக் கொட்டி வச்சுக்குவோம். இல்லேன்னு கை அவ்வளவுதான்!"

"பருத்திக் கொட்டையா?"

"ஆமாண்டா ஆமாம்—அந்த ரகசியந்தான் அங்கே அம்பலமாயிட்டுது! என்னைப் பெருமையோடவும் பிரியத்தோடும் பாத்துகிட்டு, தீச்சட்டியிலே இருக்கிற எண்ணை மாதிரி உருகிக்கிட்டிருந்த அந்த அழகான சின்ன பொம்பளை "களுக்"குண்ணு சிரிச்சிட்டா!"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? இந்த ஊருக்கு ஏதோ ஆபத்து வரப் போகுது; அதான் தீச்சட்டி கை தவறி விழுந்து அம்பாள் அபசகுனம் காட்டியிருக்கிறாள்—அப்படின்னு கதை விட்டேன். எல்லாரும் நம்பி பயந்தாங்க! என்னோட அம்பாள் மாத்திரம் சுப சகுனம் காட்டிப்பிட்டு மறைஞ்சுட்டா!"

அவன் பேச்சில் சுருளிமலைக்கு வெறுப்பு மேலிட்ட போதிலும் அதை வெளியில் காட்டிக கொள்ள இயலவில்லை. அதோடு, சிங்காரத்தின் மீது வீசிய சாராய வாடை காலையில் இளம் போதையில் அவன் இருக்கிறான் என்பதையும் அவனுக்கு உணர்த்தியது.

"சரி, சரி... அப்புறம்?" என்று எழுந்தான் சுருளிமலை.

"எனக்கு அவசரமா ஒரு தீச்சட்டி வேணும்—அம்மாகிட்ட போயி, நான் சொன்னதாச் சொல்லி ஒரு தீச்சட்டி சீக்கிரம் தயார் பண்ணி இரண்டு நாளில் கொடுக்கச் சொல்லு!"

"நீயே அம்மாகிட்ட போயி கேளு—போ!"

"ஏன்? நீ எங்க பெரிய கலெக்டர் வேலைக்குப் போறியோ?"

"ஆமாம்; கலெக்டர் வேலையை விடப் பெரிய வேலை ஒன்று இருக்கு. அதை கவனிக்கப் போறேன்!"

"அப்படிப்பட்ட வேலை என்னடா தம்பீ?"

"கொஞ்சம் அண்ணாந்து பார் மரக்கிளையை!" என்று சுருளிமலை அமைதியாக மேலே சுட்டிக் காட்டினான். சிங்காரம் அண்ணாந்து பார்த்தான். திடுக்கிட்டான். 'ஆ' என்று அவனையறியாமல் அலறி விட்டான். மரக் கிளையில் ஒரு இளம் பெண் தூக்கிட்டுத தொங்கிக் கொண்டிருந்தாள்.

"என்னடா பாவிப் பயலே இது? இவ்வளவு நாழி எனக்கிட்டே சொல்லவேயில்லையே நீ! நான் ஒரு மடையன்; இவ்வளவு நாழி இதை கவனிக்காம உனக்கிட்டே வம்பு பேசிக்கிட்டு இருக்கேன். ஏண்டா பிள்ளையாண்டான்! தூக்கு மாட்டிக்கிட்டு தொங்குறா ஒருத்தி; அதைப் பத்திக் கவலைப்படாம புல்லாங்குழல் ஊதிக்கிட்டு இருக்கியே...என்னடா...அடடா உயிர் இருக்குமோ என்னமோ தெரியலியே!" எனப் பரபரப்புடன் மரத்தில் ஏறத் தொடங்கினான் சிங்காரம்.

"சரியண்ணே! நீ இதைக் கவனி; நான் போயி பஞ்சாயத்தாரை அழைச்சுட்டு வர்ரேன்" என்று சுருளிமலை வேப்பமரத் தடியை விட்டகன்று பஞ்சாயத்தார் விடு நோக்கிப் புறப்பட்டான்.

பஞ்சாயத்தார் பரமசிவம், வீட்டுத் திண்ணைப் புறத்தில் தன் அருமருந்தன்ன மைந்தனின் சேட்டைகளைத் தாங்கிக் கொண்டு "அட ஈஸ்வரா" என்று தலையில் கை வைத்தவாறு உட்கார்ந்திருந்தார்.

"அப்போ! அப்போ! உலகத்தை யாரப்பா தூக்கிக் கொண்டிருக்கிறாங்க?"

"ஆண்டவன் தூக்கிக்கிட்டு இருக்காருடா...சும்மாகிட!"

"அவருக்குக் கழுத்தை வலிக்காதா அப்போ?"

"வலிக்கும்போது, தோள் மாதிக்குவாரு—சும்மா இரு!"

"ஒரு நாளைக்கு ஆண்டவன் உலகத்தைப் பொததுன்னு கீழே போட்டா என்னப்பா ஆகும்?"

"அப்படிப் போட்டால்தான் தேவலையே—என் சங்கடம் தீரும்—நிம்மதியாப் போகும்; உன் தொல்லையில்லாமல்!"

"எப்போ! ஆண்டவனுக்கிட்ட சொல்லி, உலகத்தைத் தூக்கி என் தலையிலே வைக்க சொல்லப்பா!"

"அதான் உன் தலையிலே உலகத்தை வச்சிருக்காரே! பிறகென்ன...மூளையையா வச்சுருக்காரு?......உலகத்தில இருக்கிற மண்ணு பூரா உன் தலையிலதானே!"

—என்று தன் தலையிலே அடித்துக் கொண்டார் பஞ்சாயத்தார். நாள் முழுவதும் வீட்டிலே யிருக்கிற நேரமெல்லாம் பஞ்சாயத்தாருக்குத் தலைவேதனைதான்.

அன்று 'அதிகாலையிலேயே வேதனை ஆரம்பமாகி விட்டதே கடவுளே' யென்று பெருமூச்சு விடும் போதுதான் சுருளிமலை அங்கு வந்து வேப்பமரத்தில் ஒரு பெண் தூக்கு மாட்டிக் கொண்டு தொங்குகிற செய்தியைச் சொன்னான். பஞ்சாயத்தார் பரபரப்புடன் வேப்பமரத் தடிக்குப் புறப்பட்டார். செய்தி பரவிடவே அவரோடு ஊராரும் பின் தொடர்ந்தனர்.

அதற்குள், மரத்திலேறிய சிங்காரம் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்க முடியாமல் அவள் முகம் மேலாக்குத் துணியால் மூடப்பட்டிருப்பதைக் கண்டான். அவசர அவசரமாக கயிற்றுச் சுருக்கை விடுவித்து, அவளைக் கீழே இறக்கினான். அதற்குள் பஞ்சாயத்தாரும் மற்றவர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். சிங்காரம் அந்தப் பெண்ணுடைய முகத்தை மூடியிருந்த துணியை விலக்கினான். அவ்வளவுதான்; "அய்யோ!" என்று அலறிவிட்டான்!

அவனை ஊரார் கவனித்து என்னவென்று கேட்பதற்குள் "அய்யோ, நீயா?" என்று உரக்கக் கூவி, தலை சுற்றிக கீழே சாய்ந்து விட்டான் சிங்காரம்.



தொடரும்

## பயணம்....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டோம் திராவிட இன எழுச்சியை என் அவருக்கு ஒரு அற்ப திருப்தி!

உலகக் கண்ணேட்டமுள்ள கம்யூனிஸ்ட்டுத் தோழர்களோ எரிந்த கட்சி, எரியாத கட்சி லாவணிப் பாட்டு, காமன் பண்டிகை கூத்துபோல, "எல்லோரும் வாருங்கள்! அண்ணைத் துரைக்குப் பதில் சொல்லப்படும்—தி. மு. க. கொள்கை பற்றிப் பேசப்படும்" என சுவரொட்டி விளம்பரம் செய்து கூட்டம் போடுகிற அளவுக்கு எரிச்சலழகர்களாகி விட்டார்கள்......

"கூத்தாடிக்கொண்டிருப்பவர்களுக்கு அரசியலில் என்ன வேலே? நாடகத்தில் பபூன் வேடம் போட்டவனெல்லாம் இன்று அரசியல்வாதி" என்று சென்னை நியூ காலேஜில் ஒரு தலைவர் பேசனாராம்; இரண்டு வாரங்களுக்கு முன்பு! அவருடைய வாழ்க்கையே அச்சுக் கோர்க்கும் தொழிலிலே ஆரம்பமாகி, அரசியலில் முடிந்திருக்கிறது என்பதை ஒருக் கணம் அவர் மறந்து விட்டார் போலும்! இதற்காகத்தான் "திரும்பிப் பார்!" "திரும்பிப் பார்!" என அடிக்கடி சொல்லித் தீர வேண்டியிருக்கிறது இவர்களைப் பார்த்து!

எதிர்க்கட்சி ஏடுகள் எதைப் பார்த்தாலும் அது சிகப்பு ஏடோ, அல்லது மஞ்சள் ஏடோ, எதிலும் நம்மைப் பற்றிய நரகல் நடைக் கண்டனங்கள் இல்லாமல் இல்லே.

அய்யோ ஆபாசமே—என நாம்தான் அவைகளைக் கண்டு விலகிச் செல்லவேண்டியிருக்கிறது.

பயணத்தில், கம்பத்தில் கண்ட காட்சிதனைக் குறிப்பிட்டேனே—மாலே நாலுமணிதான் நண்பா! அப்பப்பா; என்ன கூட்டம்! என்ன கூட்டம்! ஊரெல்லாம், மாநாடுபோல வளைவுகள்—தோரணங்கள்! உற்சாகம் படைத்த கழகத் தோழர்கள்— அங்கேதான் நண்பர் ஜீவானந்தம் ஒரு கூட்டத்தில் நமது கழகத்தை எவ்வளவு கீழ்த்தரமாகத் தாக்கிப் பேச முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாகத் தாக்கிப் பேசினராம். தோழர்கள் சொன்னார்கள். கம்யூனிஸ்டு நண்பர்கள் எவ்வளவு எரிச்சல் கொண்டிருக்கிருர்கள் என்பதற்கு வண்டிப் பெரியார் நிகழ்ச்சியைக்கூட முன்பு குறிப்பிட்டேனல்லவா? அங்கு நமது கழகக் காளையர், கலேயழகன், நண்பர் லியோன் போன்றவர்களின் அருமுயற்சியால் தோட்டத் தொழிலாளர்களின் அணி வகுப்பு உருவாகி வருகிறது. அதனைக் கண்டு ஆத்திரம் கம்யூனிஸ்டுகளுக்கு! இப்படிப் பல பகுதிகளில் தொழிலாளர் அணியில் தி. மு. கழக இலட்சிய முழக்கம் எதிரொலிப்பதை அவர்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லே. ஜனசக்தியை "ஜனசகதி" யாக்கி எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

இன்னொரு கட்சியில் "கோலா"டுகிறது — குரங்குகளும்ஆடுகின்றன. பாவம், அந்தக் கட்சியே ஆட்டம் கொடுத்துக் கொண்டுதானிருக்கிறது!

இவர்களுடைய எரிச்சலுக்கும், ஆத்திரத்துக்கும் பதிலளிக்கும் வகையில் மக்கள் மன்றம் நம் பக்கம் வந்து கொண்டேயிருக்கிறது என்பதற்கு அடையாளந்தான் போன்முடி; திருமங்கலத்தில் திராவிடர் எழுந்த காட்சியும், தேனியில் திரண்டிருந்த திராவிடப் பெருமக்களின் உற்சாகமுமாகும்!

வடக்கு — தெற்கு என்று பேசினல்; அப்பப்பா இவர்களுக்கு ஏன் இவ்வளவு வருத்தமோ தெரியவில்லே! வடக்கின் சம்பந்தியான ஆச்சாரியாரே கூடப் பரவாயில்லே; அக்கிரமத்தைக் கண்டிக்கிருர். இதுகள், குட்டக் குட்டக் குனிந்து கொண்டே குலாம்களாகக் கிடக்கிரேம் என அறிவிப்பது மாத்திரமன்றி, விடுதலே உணர்வு கொண்ட நம்மையன்றே நடுங்கா நாக்கு கொண்டு தாக்குகின்றனர். இப்போது வளர்ந்துள்ள இந்தச் சூழ்நிலையைப் பார்க்கும்போது, சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு, என் ஈரோட்டு வாழ்க்கையின்போது நான் எழுதிய இரண்டு வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

சிறுத்தையின் உறுமல்—
சிங்கத்தின் சீற்றம்!
கறுத்த கழுதையே அங்கேன்
கனைக்கிருய்?

போதும் — பயணத்தை இதோடு நிறுத்துகிறேன்.

அன்புள்ள,

**நண்பன்.**

## ஜாடை காட்டினுல், கொடி காட்டலாம்!

நேரு வருகிற 5-ந் தேதி தமிழ் நாட்டுக்கு வருகிருர்; அவர் வரும்போது பல்லாயிரக் கணக்கானவர்கள் கருப்புக் கொடி காட்டலாம். ஆனல் அப்பொழுதும் காமராசரின் போலீஸ் வந்துதான் நம்மைத் தாக்கும். அந்த நேரத்திலும்கூட காமராசரைக் கண்டிக்க முடியாது. என்று சொல்லுவார்கள்.

"என்னுல் பெரியாரை விடுவிக்க முடியும்; இன்றே, நாளையோ பெரியார் ஒரு சொல் சொல்லட்டும்; ஒரு ஜாடை காட்டட்டும்; பெரியார் திருச்சி சிறையில் கூட இல்லே; சென்னை சிறையில்தானிருக்கிருர். அவரிடம் தோழர்கள் போய் இதைச் சொல்லட்டும். இதுவரை இந்தியத் துணைக்கண்டமே பார்த்திராத அளவுக்கு—ஏற்காத தண்டனையையும் ஏற்றுக் கொண்டு கருப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்கிறேன். ஆனல், நாம் கிளர்ச்சி நடத்தியதனலேயே இழுக்குப்பட்டு விட்டதாகக்கூடச் சொல்லுவார் ... திராவிட கழகத் தோழர்கள்!

—அறிஞர் அண்ணு

## மதுரை மாவட்ட தி. மு. க.

அன்புடையீர்!

மதுரை மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் 12—1—58, ஞாயிறு காலே 10—மணிக்கு வேலூர் வழி. ஒத்தக்கடை வட்டாரம், திருமோகூரில்,நடைபெறும். அவ்வமையம் கீழ்க் கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு வரும். அங்கத்தினர்கள் தவருது வருகைதர வேண்டுகிறேன்.

1. மதுரை மாவட்ட மூன்ருவது மாநாடு.
2. வரவேற்புக்குழு அமைத்தல்
3. இதர தீர்மானங்கள்.

—எஸ். முத்து
(செயலாளர்)

## பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

விழித்தார் அவர்!

"விடா... தம்பி......அமுதா"—இதுதான் அவர் பதில்!

"நீங்கள்தானே சொன்னீர்கள்?" அமுதன் கேட்டான்.

"சொல்லட்டுமா தம்பி? என் மனைவியை நான் போய் பார்க்கப் போகும் இடம்...இடம்...சிறை—ஆமாம் சிறை தம்பி, சிறை!"—அழுதார் அவர்.

அதோ...சிறை வாசல் வந்து விட்டது அமுதன் நிமிர்ந்து பார்த்தான். "வேலூர் சிறை" என்ற கொட்டை எழுத்துக்கள் அவன் உடலை ஒரு உலுக்கு உலுக்கியது. ஆமாம்; அவன் பயந்தே போய்விட்டான்.

"பயப்படாதே! வா தம்பி! உன்னை ஒன்றும் செய்யமாட்டார்கள்." என்ருர் அவர். அமுதன் அவர் கரத்தைப் பற்றியவாறே உள்ளே சென்ருன்.

ஒரு சேவகன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் "இதுதான் அந்த அம்மாவின் அறைங்க!" என்ருன். தலையைச் சொறிந்தான். அவனுக்கு அவர் 'ஒரு அணு' கொடுத்துவிட்டு அறைக் கதவைத் திறந்தார். அங்கே...

அவரது மனைவி படுத்திருந்தாள்.

"தாரா!"—என்று வாய்விட்டுக் கதறினர் அவர். அமுதன் விழித்தான்! தாராவா? அந்த அம்மாளின் அருகில் சென்று பார்த்தான். ஆமாம்—தாரா— அமுதனின் தாய்தான் அவள்!

"தாரா"

"அம்மா"—இருவரும் எழுப்பினர்கள் அவளை.

அவள் எழுந்திருக்கவில்லே—கண்ணை மூடிப் படுத்திருந்தாள். அவர் அவளை உலுக்கினர்—அமுதன் அவளை சேர்த்துக் கட்டிக் கொண்டு 'அம்மா, அம்மா' என்று ஆட்டினன்.

எழுந்திருக்கவே இல்லே அவள்.

அவருக்கு சந்தேகம் வலுத்தது. அவளது கையைப் பிடித்துப் பார்த்தார். மூக்கில் கை வைத்துப் பார்த்தார். "அய்யோ தாரா?"—வாய்விட்டுக் கதறினர். நீ போய் விட்டாயா தாரா?"—அவர் அழுகை மேலும் தொடர்ந்தது.

"என்ன; அம்மா செத்துவிட்டார்களா?"—அமுதனுக்கு அழவே முடியவில்லே, தாராவின் மீது புரண்டு புரண்டு கத்தினன்: கதறினன்.

தாராவின் தலையணையின் பக்கத்திலே ஒரு வெள்ளைக் காகிதம்! அதை எடுத்தார் அவர்—பிரித்தார்; ஒரு கடிதம்! படித்தார்:

"அமுதா—என் மகனே!

உன்னைத் தனியாக விட்டுவிட்டு நான் சிறையிலே இருக்கிறேனடா! ஏன் என்று நீ கேட்பாய் மகனே! மோட்டாபாயின் வீட்டிலே பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள வைரத்தைக் காணும். அதைத் திருடியவள் நான்தான் என்று என்மீது பழி போட்டு விட்டார்கள்-எட்டு வருட சிறை எனக்கு!

துள்ளித் தவழ்ந்து—விழுந்து எழுந்து—குதித்துக் குந்தி ஆடிப் பாடி ஓடி விளையாடிய என் மகனே! செல்வமே! உன்னை விட்டு எப்படியடா எட்டு வருடங்கள் உயிர் வாழ்வேன்?

மிலிடெரிக்குச்சென்ற உன் அப்பாவுக்குக் கடிதம் எழுதி ஒருவாரமாகியும் பதிலேக் காணும்—அவரும் வரவில்லே—அவர் நம்மை மறந்து விட்டார். இனி உன் அப்பா உனக்கல்ல; எனக்குமல்ல!

என் செல்வமே அமுதா! இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு போலீஸ் உன்னிடம் வருவார்கள். நீ அவர்கள் சொல்வது போலவே .....அய்யோ சொல்லவே என் நா கூசுகிறது...... என் கரங்கள் நடுங்குகின்றன... ...நீ அனதை விடுதியிலே சேர்ந்துவிடு! நீ நன்ருக இருக்க வேண்டும் என்பதே என் கவலே!

நீ என்னை மறந்து விடாதே செல்வமே!

இப்படிக்கு
தாரா"

கடிதத்தைப் படித்தார் அவர். "அய்யோ தாரா! இதோ, நான் வந்து விட்டேன்" என்று கதறினர். அவளுக்குக் கேட்குமா அது?

தாராவின்மீது புரண்டு அழுது கொண்டிருந்த அமுதனை அருகில் அழைத்தார். "அமுதா, என் மகனே! நீதாண்டா என் மகன்! நான் தாண்டா உன் அப்பா ராமச்சந்திரன்! நான்தான் வந்து விட்டேனடா" என்றவாறு அவனைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு அழுதார்.

"ஏன் வந்தீங்க? அம்மா செத்து விட்ட பிறகு வந்து பார்க்கலாம் என்று இத்தனை நாள் சும்மா வராமல் இருந்து விட்டீங்களா அப்பா—அப்பா—" என்று அவர் உடலை உலுக்கினன். அவர் அமுதனின் பிஞ்சு உடலை நெஞ்சோடு அணைத்தார்.

தாயும் சேயும் பிரிந்ததைப் பார்—
தந்தை முகத்தை அறிந்தும்
தனயன்
பாயும் சோதச் சுழலில் சிக்கி
பரிதவிக்கும் காட்சியைப் பார்!

ஓடும் ரயிலில் பாடிய அந்தச் சிறுவனின் குரல் அமுதனின் செவிகளில் விழுந்தது!

—சோர்ணம்



## சுழல் விளக்கு

மாறன்

"காகிதப்பூ மணக்காது.

காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது."

—இது பொதுத் தேர்தல் நேரத்திலே தி. மு. கழகம் வெளியிட்டிருந்த சுவரொட்டிகளில் அணி செய்த வாசகங்கள்!

இதைப் பார்த்து விட்டுத்தான் அமைச்சர்கள் கேலி செய்தார்கள்—அடுக்குச் சொல்லைத் தவிர இவர்களுக்கு வேறு என்ன தெரியுமென்று!

பாவம்! அன்று அவர்கள் மறைக்க முயன்றார்கள், நமது சுவரொட்டிகளிலே வெறும்

# ★ காகிதப் பூ மணக்காது! ★

வார்த்தை அலங்காரம் மட்டும் தான் இருக்கிறது என்று!

ஆனல் இன்றோ அந்த வாசகங்களிலே உண்மைகளிடம் புரியும் பேரலங்காரமும் இருக்கிறது!—என்பதைப் பொது மக்கள் புரிந்து கொள்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

தொழில்களைத் தேசிய உடைமையாக்குதல்—அதாவது. தனிப்பட்ட லாபம் ஒரு முதலாளியைப் போய்ச் சேராமல் அந்தத் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்தி அந்த லாபத்தை எடுத்துக் கொள்வது—இந்தத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளாத எந்த முற்போக்கு மனிதனும் இருக்க மாட்டான்!

காங்கிரஸ் கட்சியும் இந்தத் தத்துவத்தைத் தழுவியது.

ஆவடியிலே மாநாடு கூட்டி மிக அழகாகத் தீர்மானம் தீட்டினர்கள்...இனிமேல் காங்கிரசின் கொள்கை 'சோஷலிச பாணி' என்று!

'இனிமேல்' கடைப் பிடிக்க வேண்டிய மார்க்கம் சோஷலிச பாணி என்றதனல் தாங்கள் 'இது வரை' கடைப்பிடித்த மார்க்கம் அதற்கு நேர் எதிரானது—என்பதையும் கோடிட்டுக் காட்டினர்கள்.

ஆனல் மண்ணெல்லாம் பொன்னுகிவிட முடியுமா? காங்கிரஸ் ஆவடியிலே தோண்டி எடுத்து பைகளிலும் பெட்டிகளிலும் நிரப்பிக் கொண்டது பொன்னல்ல; மண்!

சோஷலிச பாணி—ஓட்டுச் சம்பாதிப்பதற்காக அவர்கள் போட்டுக் கொண்ட வேஷம்!

ஆனல் உண்மையில் தனிப்பட்ட முதலாளிகளும், மார்வாரிகளும் கொள்ளை லாபத்தைச் சுருட்டிக் கொண்டு போகிருர்கள்!

சோஷலிச பாணி என்கிற பெயரிலே தொழில்கள் அனைத்தும் தேசிய உடைமையாக்கப்பட்டு வருகின்றன: ஆனல் அந்தத் திரை மறைவிலே ஊழல் நடத்தி சில திருட்டு முதலாளிகள் லட்சக் கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்!

சமீபத்தில் பெரோஸ் காந்தி அவர்கள் பாராளு மன்றத்திலே வெளியிட்ட சில திடுக்கிடும் சம்பவங்கள் இந்த அரசாங்கத்தை நிர்வகிப்பவர்களின் கோர சொருபத்தைத் தெற்றென எடுத்துக் காட்டியிருக்கிறது.

இன்சூரன்ஸ்—சமீபத்தில் தேச உடைமையான அமைப்பு!

இதை வைத்துக் கொண்டே தாங்கள் ஒரு மகத்தான சாதனையைச் செய்து விட்டதாகத் தற்பெருமை பேசித் திரிந்திருக்கின்றனர். பல தலைவர்கள்!

பொது மக்களுக்கும் ஓரளவு மகிழ்ச்சிதான்! இன்சூரன்ஸ் தனிப்பட்டவர்களின் கையில் இருந்தால் அதற்குப் பாதுகாப்பு குறைவுதான்; எனவே இதை அரசாங்கம் மேற்கொண்டு விட்டால் தக்கவர்கள் கையில் பாதுகாப்பு இருக்கும்' என்றுதான் எல்லோரும் எண்ணி மகிழ்ந்தார்கள்!

ஆனல் நிலைமை என்ன? முதலாளி என்னும் மலைப் பாம்பின் வாயிலிருந்து தப்பிய இரை இப்போது அரசாங்க நிர்வாகம் என்னும் அறுபதடி வேங்கையிடம் மாட்டிக் கொண்டது போல் இருக்கிறது கதை!

அதாவது ஒரு கோடியே ஐம்பத்தி ஆறு லட்சம் ரூபாய்கள் தவறான வழியில் முதலீடு செய்யப் பட்டிருக்கின்றதாம்.

இவ்வளவு பெரிய தொகை ஏதாவது அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான விஷயங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று கருதுகிறீர்களா?

அதுதான் இல்லை!

'முந்த்ரா ஸ்தாபனங்கள்' என்னும் தனிப்பட்ட முதலாளியின் நன்மையைக் கருதி அந்த 1,56,00 000 ரூபாயும் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது!

அதற்காக அந்த முந்த்ரா கம்பெனியின் பங்குகளின் விலை அனைத்தும் வேண்டு மென்றே உயர்த்தப் பட்டதாம்!

இன்சூரன்ஸ் பணத்தை அதில் முதலீடு செய்வதற்குமுன் அரசாங்கம் அந்தக் கம்பெனியின் வரவு செலவுக் கணக்கை ஆராய்ந்திருந்தால் முட்டாள் கூட இப்படி முதலீடு செய்வதற்கு ஒப்பியிருக்க மாட்டானும்!

ஒரு சமயம் கல்கத்தா பம்பாய் பங்கு மார்க்கெட்டுகள் மூடப்பட்டிருந்த போதுங்கூட அரசாங்க மேற்பார்வையில் இருக்கும் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் முந்த்ரா கம்பெனியாரோடு வியாபாரத் தொடர்பு கொண்டிருக்கிறது.

இன்சூரன்ஸ் கம்பெனி முதலீடு செய்வதற்கு முதல் நாள்தான் முந்த்ரா கம்பெனிப் பங்குகளின் விலை வேண்டுமென்றே உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனல் இன்சூரன்ஸ் கம்பெனி பங்குகளை வாக்கிய மறுநாளோ அவற்றின் விலை 'மடா'ரென்று சரிந்து விட்டிருக்கின்றன.

மேற்படி முந்த்ரா கம்பெனி உதவியை நாடுவதற்கு முன்பு ஸ்டேட் பாங்கியிலும், 'ரிசர்வ் பாங்கி'யிலும். தேசியத் தொழில் விஸ்தரிப்புக் கார்ப்பரேஷனிடமும் நிதியுதவி கேட்டிருக்கிறது. அவைகள் மறுத்திருக்கின்றன. ஆனல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் மட்டும் துணிந்து அதிக விலை கொடுத்து பங்குகளை வாங்கி அந்தக் கம்பெனிக்கு உதவியிருக்கிறது.

பொதுப் பணத்தை ஒரு பொது ஸ்தாபனம் இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு தனிப்பட்ட முதலாளிக்கு வாரிக் கொடுப்பானேன்?

மூந்த்ரா கம்பெனிக்கு மட்டும் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் உதவி செய்திருக்கிறதா? அல்லது எல்லா முதலாளிகளுக்குமே அப்படித்தானு?

—இதுபோன்ற கேள்விகள் தோன்றுவது இயற்கைதான்!

தனிப்பட்ட முதலாளிகளின் பங்கை அதிக விலை கொடுத்து வாங்குவது என்பது நிச்சயமாக ஒரு பொது ஸ்தாபனத்தின் நோக்கமாயிருக்க முடியாது.

எனவே, இதிலிருந்து விளங்குவது என்னவென்றல் முந்த்ரர கம்பெனியாரின் உரிமையாளர் முந்த்ராவுக்கும் மந்திரி சபையிலுள்ள யாரோ ஒருவருக்கும் ஏதோ தொடர்பு இருந்திருக்கிறது.

ஒரு அமைச்சரது கண் அசைவு இல்லாமல் இவ்வளவு பெரிய தொகை மோசடிப் பொருளாக மாறியிருக்க முடியாது—என்பது மட்டும்முழுக்க முழுக்க உண்மையாக இருக்கக்கூடிய யூகமாகும்!

இதை உறுதிப்படுத்துவதைப் போலவே தோழர் டாங்கே ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிருர். அதாவது இப்போது டெல்லியில் மந்திரியாக இருக்கும் ஒருவர் முன்பு முந்த்ரா ஸ்தாபனத்தில் டைரக்டராக இருந்தவராம்.

ஆக, ஒரு 'பெரிய புள்ளி' இந்த ஊழல் விவகாரத்திலே சம்மந்தப் பட்டிருக்கிறது என்பது மட்டும் வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

எது எப்படியிருந்தபோதிலும் 'இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன்' என்பது நிதி இலாக்காவின் பொறுப்பிலிருப்பது. எனவே நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்தான் இதற்குப் பொறுப்பாளி.

பாராளு மன்றத்தில் பெரோஸ் காந்தி இந்த ஊழல்களையெல்லாம் அம்பலப்படுத்திக் கொண்டிருந்த நேரத்தில் நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் எப்படி இருந்தார் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை வர்ணிப்பதைப் படியுங்கள்:

குறிப்பாக வழக்கத்திற்கு மாருக இன்று தோழர் கிருஷ்ணமாச்சார்யார் ஒன்றும் புரியாத நிலையில்—ஏன், பீதியோடுகூட—காணப்பட்டார். ஒரு சமயம் அவர், "கனம் அங்கத்தினர் (பெரோஸ் காந்தி) என்மீது கொஞ்சம் இரக்கம் காட்டுவாராக!" என்றுகூடக் குறிப்பிட நேர்ந்தது.

—இப்படி தனிப்பட்ட முதலாளிக்குப் பொதுப் பணத்திலிருந்து தாராளமாக உதவுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கும் இந்தக் காங்கிரஸ் கட்சியினர்தான் 'சோஷலிச பாணி' பேசுகிருர்கள்!

—இவ்வளவு ஊழலுக்கும் பொறுப்பேற்க வேண்டிய நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் தான் இன்னும் விளக்கம் தராமல் வெட்கமின்றிப் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிருர்!

அய்யோ; வெட்கம்! ...




அரசாங்கத்திற்கு வாழ்க்கைப்பட்ட இன்குரான்ஸ் கார்ப்பரேஷன் மூந்த்ரா என்ற வடநாட்டு மார்வாரியிடம் ரகசியமாகக் கொஞ்சி மகிழ்ந்திருக்கிறது.

# ‘கம்யூனிஸ்டுக் கடவுள்’!

பொதுவுடைமைக் கொள்கையை முதன் முதலாகச் செயலுக்குக் கொணர்ந்த இலட்சியவாதி லெனின், “கடவுள் என்பது மனித இனத்தின் அறியாமையாலும், மனிதர்கள் முதலில் இயற்கைச் சக்திக்கும் அதன் பின்னர் வகுப்புக் கொடுமைக்கும் அடிபணிந்தமையினாலும் உண்டான எண்ணங்களின் சேர்க்கையே தவிர வேறல்ல” என்று தம் நண்பரான மார்க்சிம் கார்க்கிக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிடுகிறார். அதே கடிதத்திலேயே, வேறோர் இடத்தில். “கடவுள் என்ற எண்ணத்திற்குத் தத்துவார்த்தமான எழிலை உண்டாக்கி ஏதுமறியாத தொழிலாளர்களையும், விவசாயிகளையும் பிணைத்து வைத்திருப்பதான அந்த விலங்கைச் செப்பனிட்டு உறுதியாக்கி விட்டவராகிறீர்கள்” என்றும் கார்க்கியைக் கடிந்து கொள்ளுகிறார், அவர்.

கார்க்கி ஒரு முறை தன் கட்டுரையொன்றில், “மக்களுக்குச் சமூக உணர்ச்சியை உண்டாக்குவதும், சமுதாயத்துடன் ஒவ்வொரு நபரையும் பிணைத்துக் கட்டுக்கோப்பை ஏற்படுத்துவதும், மனித நெஞ்சங்களில் இயல்பாக ‘எழும் விலங்கு மனப்பான்மையாகிய சுயநலத்தை ஒழிப்பதுமான எண்ணங்களின் சேர்க்கையே இறைவன்” என்று எழுதியிருந்தார். இக்கூற்றை மறுத்துத்தான், மேதை லெனின் மேற்கண்டவாறு அவருக்குக் கடிதமெழுதியிருந்தார்.

கார்க்கியின் கருத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கையில், “உங்கள் கூற்றைப் பிற்போக்கானதும், பணக்கார வகுப்பை ஆதரிப்பதுமான கூற்று என்று நான் குறை கூறக் காரணம், ‘நமது மிருகத்தனமான சுயநலத்தை ஒழித்தல் வேண்டும்’ என்ற பாதிரிமார் போதனையை உங்கள் கூற்று புதுப்பிக்கிறது என்பதால் தான். உண்மையில், நமது விலங்கு மனப்பான்மையாகிய சுயநலத்தை கடவுளைப் பற்றிய சிந்தனை என்றைக்கும் அகற்றியதில்லை. முற்காலத்து மக்கள் ஒன்றுபட்டு வாழத் தொடங்கியதாலும், கூட்டுறவு வாழ்க்கையை அவர்கள் அமைத்துக் கொண்டதாலுமேதான் சுயநில உணர்ச்சி ஒழிந்ததேயன்றி, கடவுட் சிந்தனையாலல்ல” என்கிறார்: அவர்.

‘கடவுளைப் பற்றிய சிந்தனை என்றுமே சமூகத்தையும், தனி மனிதனையும் ஒன்றாகப் பிணைத்ததில்லை. கடவுளைப் பற்றிய எண்ணத்திற்கு எப்பொழுதும் அடிமைத்தனமே-மிகமிகக் கீழ்த்தனமான அடிமை மனப்பான்மையே — அடிப்படையாக இருந்து வந்திருக்கிறது. அடக்கிவைக்கப்பட்டுள்ள வகுப்பினர் அடக்கி வைத்திருக்கும் வகுப்பாருக்கு அடங்கி நடப்பதே தெய்வத்தன்மை என்று அது— அந்த ‘கடவுளைப்பற்றிய எண்ணம்’—கூறி வருகிறது’ என்பதுதான் லெனினுடைய உறுதியான கடவுட் கொள்கையாக இருந்தது.

“மதம் அவரவர்களின் சொந்த விஷயம்” என்ற சமதர்மவாதிகளின் கூற்றுக்கு லெனின் பின்வருமாறு சமாதானம் கூறினர்:

“அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரையில் மதம் அவர்களது சொந்த விஷயமாகக் கருதப்படும்; ஆனல், நம் சமதர்ம இயக்கத்தைச் சார்ந்தோரைப் பொறுத்த மட்டில் மதத்தை அவர்களுடைய சொந்த விஷயமாக விட்டு விட முடியாது”

‘பயத்திலிருந்து தெய்வங்கள் பிறந்தன’ என்ற பழமொழி, லெனினைப் பெரிதும் கவர்ந்திருந்தது. ‘மதம் ஒரு தனிப்பட்ட விஷயமாக இருப்பதால், பொதுத் துறைகளிடமிருந்து அதற்கு உதவியோ, செல்வாக்கோ தரப்படமாட்டாது. கோவில், மதம், கடவுள் ஆகியவைகளை, அரசாங்கம், பள்ளிக்கூடங்கள், கலை முதலியவைகளிடமிருந்து அறவே பிரித்து விடுதல் வேண்டும்’ என்ற கருத்துடைய அவர், “மதம் தனித்தியங்க நாம் அனுமதிப்பதன் காரணம், அதன்பால் நமக்கிருக்கும் அனுதாபமோ, இரக்கமோ அல்ல; பத்திரிகைகளாலும், சொற்பொழிவுகளாலும் மக்கள் நெஞ்சங்களில் அறிவொளியை நிரப்பி, தனித்திருக்கும் மதம் என்னும்— இருளை அகற்றி விட முடியும் என்ற நம்பிக்கை இருப்பதுதான்” என்று ஓரிடத்தில் விளக்குகிறார்.

‘மார்க்சிசம் மதத்திற்கு எதிர்ப்பல்ல’ என்ற இடைக்காலப் பிரச்சாரத்தை வன்மையாகக் கண்டித்து வந்த லெனின் தம் கட்டுரைகளின் வாயிலாகத் தம்மை ஒரு கடைந்தெடுத்த நாத்திகராகவே காட்டிக் கொள்ளுகிறார்.

—மலர் மன்னன்

## ஐயோ, வெட்கக்கேடு!

“பார்ப்பனர்களுக்குத் துணி வெளுக்காதீர்கள்!
பார்ப்பனர்களுக்கு சிரைக்காதீர்கள்!
பார்ப்பனர் நிலத்தை உழாதீர்கள்!
பார்ப்பனர் நிலத்தை அறுவடை செய்யாதீர்கள்!
பார்ப்பனர் உறவை அறவே நீக்குங்கள்!
பார்ப்பன வக்கீல்களை நாடாதீர்கள்!
பார்ப்பனப் பத்திரிகைகளை வாங்காதீர்கள்!
பார்ப்பனர் கடைகளிலே பண்டங்கள் வாங்கவே வாங்காதீர்கள்!

—விடுதலை (23-12-57)

ஆனல் பார்ப்பனருக்கு ஓட்டு மாத்திரம் போட்டு அவர்களை ஆட்சியில் உட்கார வையுங்கள்!

## ஆட்சிக் கொலு...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

திய துணைக் கண்ட அரசியல் கொலுவில் இடம் பெற்றுள்ள விசித்திர சித்தர்களில் குறிப்பிடத்தக்க சிறப்பு இவருக்கும் உண்டு.

டில்லிப் பேரரசு, திட்டத்துக்குத்தேவையான நிதியைத்திரட்டுவதற்காக மக்கள் தலைமையில் கனமான வரிப் பளுவைக் கட்டி விட்டது. நாட்டிலுள்ள நல்லறிவாளர்களெல்லாம் வரியைக் குறைக்க வேண்டுமன்று கூறினர். அப்பொழுது பத்திரிகையில் ஒருவர் “திரு. ராசகோபால ஆச்சாரியார் வரி விதிப்பை எதிர்க்கிறாரே அது பற்றி தங்கள் கருத்தென்ன?” என்று கேட்டபோது ‘அவருக்கும் எனக்கும் — சண்டை ஆகவே எதிர்க்கிறார்’ என்று பதில் சொன்ன அரசியல் அறிஞர் (!) அவர்.

அதுபோலவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரி விதிப்புக் கண்டன நடவடிக்கைகள் பற்றி அவர் கருத்தைக் கேட்டபோது “அவர்கள் எனக்குத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு நான் செவி சாய்க்கத் தேவையில்லை” என்ற தொனியில் பதிலளித்தார்.

“நான் பத்திரிகையைப் பார்த்தால் முதலில் ‘மரணம்’ என்ற தலைப்பைத்தான் பார்க்கிறேன். பணம் படைத்தவர்கள் விரைவில் சாகமாட்டேன் என்கிறார்கள். இதைப் பார்த்தால மரண வரி எதிர்பார்த்த அளவில் வசூலாகாமல் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது” என்று மக்கள் சபையில் பேசியதன் மூலம் நாட்டோரெல்லாம் இடுகாட்டடைவதிலே தனக்கு எவ்வளவு ஆர்வமும் அக்கரையும் இருக்கிறது என்பதைக் காட்டிக் கொண்டவர் அவர்.

அவர்தான் இப்பொழுது ‘ஐந்தாண்டுத் திட்டத்தைப் படித்தவர்கள்தான் குறை கூறுகிறார்கள்’ என்று கூறி ஆயாசப்படுகிறார். ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறை சொல்லாமலிருப்பதிலே அவருக்கு ஆனந்தம்தான. அப்படி குறை கூறுதவர்கள்தான் நாட்டிலே மிகுதியாக இருக்க வேண்டும் என்பதிலும் அவருக்கு ஆசை மிகவுண்டு. அவர் கருத்துப்படி அப்படியிருப்பவர்கள் படிக்காதவர்கள்தான். எனவே கல்வியறிவில்லாத மக்களே நாட்டிலே நிரம்பியிருக்க வேண்டும் என்று நிதியமைச்சர் கருதுகிறார். ஒரு வேளை அடுத்த வரவு செலவு திட்டத்தின் போது கல்வித் துறைக்கு ஒதுக்க வேண்டிய தொகையைக் கணிசமான அளவு அவர் குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

“படித்தவர்கள்தான் குறை கூறுகின்றார்கள்” என்று நிதியமைச்சர் கூறிய காரணத்தினால் தான் திரு. பிரகாசா ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி அறிந்து கொள்வதிலே அக்கரை காட்டவில்லை போலும்.

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய தன அறியாமையை வெளிப்படுத்திய இந்த அதிசய மனிதர் ‘வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது’ என்று நாம் எடுத்துக் கூறுவது பற்றியும் தன் கருத்தைத் தெரிவித்துள்ளார். வேடிக்கையாகப் பேசுவதாகவே எண்ணிக் கொண்டு தன் அறிவுத் தெளிவுக்கு மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். “இந்திய தேசப் படத்தைச் சுவற்றிலே தொங்க விட்டுப் பார்த்தால் உயரே இருக்கும் வடநாடு கீழே இருக்கும் தென்னாட்டை அழுத்துவது போல் தான் தோன்றும். ஆனல் படத்தைத் தரையிலே போட்டுப் பார்த்தால் அந்த வேறுபாடு தோன்றாது” என்று அண்மையில் திரு. பிரகாசா அவர்கள் கூறியுள்ளார். அந்த அப்பாவி மனிதரை எண்ணி அனுதாபம் கொள்ள வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். 1957-ல் இப்படிப் பேசிய திரு. பிரகாசா ஏறத்தாழ இரண்டு ஆண்டுகட்கு முன்னர் வடநாட்டு ஆதிக்கம் தென்னாட்டின் மேல் வலுத்திருப்பதை ஒத்துக்கொண்டு, அந்நிலை குறித்துத் தான் ஆயாசப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

6-2-55 ல் அகில இந்திய அச்சகத்தாரின் மூன்றாவது மாநாட்டைத் துவக்கி வைத்து சொற்பெருக்காற்றிய திரு. பிரகாசா அவர்கள், “தென்னாட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது. தென்னாட்டிற்கு வடநாடு தேவையில்லை என்ற எண்ணம் தென்னாட்டில் நிலவுவது தெளிவாகத் தெரிகிறது. வடநாட்டிலிருந்து தென்னாட்டைப் பிரித்து விட வேண்டும் என்பதற்காக வலுமிகுந்த இயக்கங்கள் இருக்கின்றன. இந்நிலை குறித்து நான் கவலைப்படுகிறேன்.” என்று தெரிவித்துள்ளார். வடநாடு தென்னாட்டை அடிமைப்படுத்துவதையும், அடிமைத் தளையை அறுத்தெறிய தென்னாடு துடித்துக் கொண்டிருப்பதையும், தெக்கணத்தை விடுவிக்க திராவிட இயக்கங்கள் பாடுபடுவதையும், வலுமிக்க இயக்கங்கள் முழுபலத்தோடும் பணி புரிவதையும், இவையெல்லாம் அவர் இதயத்திலேகவலையை வளர்த்திருப்பதையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதுபோலவே சென்னை அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள திரு கக்கன் நாக்கில் நரம்பில்லாமல் எதிர்க்கட்சிகளை ஏசுவதிலே ‘தென்னாட்டு நேரு’வாகத் திகழ்கிறார். தென்னாட்டிலே அணை கட்டுவதற்கெல்லாம் வடநாட்டிலே இருந்து பணம் தருகிறார்களாம். அப்படியானல் தென்னாட்டினர் தரும் வரிப் பணங்களெல்லாம் வங்காளக்குடாக் கடலிலே கொட்டப்பட்டதாக எண்ணினார் போலும்! அதுபோலவே அண்மையில் ஒரு பொதுக்கூட்டத்தில் இரவு பேசிக் கொண்டிருககும்போது செயற்கைச் சந்திரனைப் பார்த்ததாகக் கூறினார். தொலை நோக்கிகளைக் கொண்டே சில வேளைகளில் காண முடியாமல் விஞ்ஞானிகள் திண்டாடும் குழந்தைத் திங்களை நரைதிரை மூப்பெய்திப் பார்வை மழுங்கிய நிலையிலிருக்கும் அந்த அமைச்சர் இருட்டு நேரத்தில் பார்த்ததாகக் கூறுவதை யார்தான் நம்ப முடியும்!

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் பொழுது இந்தியத் துணைக் கண்ட அரசியல் அரங்கில் எத்தனையோ பல வேடிக்கையான மனிதர்களும், விந்தையான உருவங்களும், அதிசயப் பிறவிகளும் வந்து போகின்றன என்றுதான் நாம் கூற வேண்டியுள்ளது! ஃ

—நாஞ்சில் அன்பழகன்

## பொங்கல் மலர்

மலர் தனிப் பிரதி தேவைப்படுவோர் பதிவு தபால் கட்டணம் உட்பட ரூ. 2—75 அனுப்பி பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். பதிவுத் தபால் வாயிலாக அனுப்பினால்தான் மலர் தடங்கலின்றி கிடைக்கும் என்பதற்கும் உறுதிதர இயலும்.

—நிர்வாகி

## பிறைவானம்

இரவு நேரம்! காரிருளைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டது பம்பாய் மெயில்!

அமைதியான அந்த இருட்டு வேளையிலே ஊர்ந்து செல்லும் புகை வண்டியின் 'ஜிகு ஜிகு' சத்தம் அமுதனின் மனதுக்கு ஏதோ இனம் தெரியாத ஓர் உணர்ச்சியை ஊட்டியது ஒரு முறை ஜன்னல் பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். கண்ணுக் கெட்டிய தூரம்வரை இருள் கப்பிக் கொண்டிருந்தது - அப்படித்தான் அமுதனின் நெஞ்சிலும் இருள் சூழ்ந்து கிடந்தது.

எங்கே செல்கிறோம்?

ஏன் செல்கிறோம்?

அடிக்கடி அவன் உதடுகள் அசைந்தன. காய்ந்து போயிருந்த அவன் உதடுகளை நாக்கால் ஈரப் படுத்திவிட்டு ஏதோ சிந்தித்த வண்ணமாய்க் கிடந்தான். ஈரக் காற்றும், சிறு தூற்றலும் அவன் உடலை சிலிர்க்க வைத்தது—தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு ஜன்னல் கதவுகளை மூடிவிட்டுத் திரும்பிப் பார்த்தான்—அங்கே...?

யார் அது?

அவனை ஏன் அப்படிப் பார்க்க வேண்டும் அந்த மனிதர்?

அவர் சிரிக்கிறார்—பதிலுக்கு அமுதனும் சிரிக்கிறான்.

"எங்கே போகிறாய் தம்பீ?"— இது அவர் கேள்வி.

"ம்...ம்..." அவன் பதில் இது தான். வண்டியில் ஏறி உட்காரும் போதுகூட எங்கே போகிறோம்; ஏன் போகிறோம் என்ற அவனுக்கே தெரியாத அந்தக் கேள்விக்கு பதில் எப்படிச் சொல்வான் அவன்?

"ம்...பம்பாய்க்கு" — அமுதனின் வாயிலிருந்து எப்படியோ இந்தப் பொய் வெளிவந்து விட்டது. அதோடு விட்டாரா அவர்...?

"எதற்காக?" என்றார்.

இந்தக் கேள்வி அதைவிட மிகக் கடினம்! ஆனால் அமுதன் பதில் சொன்னான், "எனக்கே தெரியாது" என்று!

அந்த மனிதர் சிரித்தார். ஏன் சிரித்தார்? ஏளனமோ: பரிதாபமோ? அமுதன் பேசவில்லை— மௌனம் கொண்டான். அந்த மனிதரும் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

'சோ'வென்று மழை பெய்ய ஆரம்பித்தது — அந்த மழையின் இரைச்சலோடு பிரயாணிகள் விடும் குறட்டை ஒலியும் மெல்ல சேர்ந்து கேட்டது.

அப்போது...

"தாயும் சேயும் பிரிந்ததைப் பார்!
தந்தை முகத்தை அறியா தனயன்
பாழும் துன்பச் சுழலில் சிக்கி
பரிதவிக்கும் காட்சியைப் பார்!"

-என்ற இசையுடன் கூடிய பாட்டு இனிமையான குரலில் கடலின் அலை ஓசையைப்போல காதில் வந்து ரீங்காரமிட்டது! நிமிர்ந்து பார்த்தனர் பிரயாணிகள்.

எதிரே ஒரு சிறுவன் கையிலே 'கிட்டி' வைத்து தாளம் போட்டுக் கொண்டிருந்தான். காதிலே கையை வைத்துக் கொண்டு நெஞ்சு நரம்பெல்லாம் விங்க ராகத்தை இழுத்தான் அவன். அழுத்தம் திருத்தமாக அவன் பாடிய பாட்டு அமுதனின் நெஞ்சிலே என்ன செய்ததோ — கண்கள் கலங்க அந்தச் சிறுவனைப் பார்த்தான். சிறுவனும் பாடி முடித்து தன் கையை நீட்டினான். "அய்யா — சாமி — ஒரு காலணா!"-அந்த அபலைச் சிறுவன் கேட்டான். இத்தனை நேரம் பார்த்துக் கொண்டும் அவன் இனிமையான குரலை ரசித்துக் கொண்டும் இருந்தவர்கள் அந்தச் சிறுவனுக்கு ஒருகாலணா கொடுக்க மனம் வரவல்லையோ என்னவோ- ஊமை போலவே இருந்தனர். சிறுவன் கத்திக் கத்தி பக்கத்துப் பெட்டிக்கு மாறிவிட்டான். பிரயாணிகள் அந்த அமைதியான வேளையில் உறக்கத்தில் ஆழ்ந்துகொண்டிருந்தனர். ஆனால்...அமுதன்? அவன் தூங்கவில்லை.

எங்கே செல்கிறோம்?

ஏன் செல்கிறோம்?

மறுபடியும் அதே கேள்விகள் அமுதனின் உள்ளத்திலே அலை மோதியது. இரண்டு முறை வாய் விட்டே கத்தினான். பதில்...... கிடைத்தால்தானே?

வற்றாத வளமும் மங்காத புகழும் பெற்று, கொட்டி வைத்த



# தாயும் சேயும்

வைரக் கோபுரம் போன்றிருந்த குடும்பம்—பற்றாக் குறையால், வறுமையின் சூறையால் மூலைக் கொன்றாய் சிதறிவிட்டது. ஆமாம்: ராமச்சந்திரர்—அவர்தான் அமுதனின் அப்பா—அமுதன் பிறந்த மறு ஆண்டே 'மிலிடெரியில்' சேர்ந்து விட்டார். தாயும் சேயுமாக தாராவும் அமுதனும் தவித்தார்கள். தாரா...அது யார்?

அமுதனின் சிந்தனை தாராவைப் பற்றி—தன் தாய் தாராவைப்பற்றி நினைத்தது இரண்டு சொட்டு நீர் அவன் கன்னங்களை ஈரப்படுத்தின.

"அம்மா!" உரக்கக் கத்தினான்: விம்மினான்: விக்கினான். "அம்மா நீ எங்கே இருக்கிறாய்?"—அவனையே அவன் கேட்டுக் கொண்டான்.

'மோட்டா பாய்!'—இவன் வடநாட்டு முதலாளி—சென்னையிலே பெரிய வைர வியாபாரி—அவன் வீட்டிலே தாரா—அமுதனின் தாய் ஒரு வேலைக்காரி. அவள் உழைப்பிலே வளர்ந்தவன் அமுதன். காலையிலே சென்று மாலைக்கெல்லாம் வீடு வரும் தாரா ஒரு நாள் வரவில்லை.

ஏன் வரவில்லை? இரவெல்லாம் காத்திருந்தான் அமுதன்—அம்மா வருவாள் வருவாள் என்று. ஆனால் நடந்தது என்ன? அவள் வரவே இல்லை!

ஒருநாள்!

ஒரு வாரம்!

இரு வாரம்!—அவள் வரவே இல்லை!

தாரா எங்கே? தாய் எங்கே? ஏன் வரவில்லை? எங்கே போய் விட்டாள்?

மோட்டாபாயிடமிருந்து அமுதனுக்கு வந்த பதில்...? "உன் அம்மா செத்துப் போயிட்டா!"

ஆ!...அய்யோ! அம்மா! — அழுதான் அமுதன். ரயில் வண்டி பெரும் இரைச்சலோடு அரக்கோணத்தில் வந்து நின்றது. நெடுந்தொலைவு சுமந்து வந்த 'பளு'வை, சுமைத்தாங்கியின் மீது வைத்துவிட்டு, ஒரு பெருமூச்சு விட்டு, நெற்றி வியர்வையை நிலத்தில் வழித்துவிடும் ஒரு கூலி போல கூவும் அந்த புகை வண்டியும் இளைப்பாற ஆரம்பித்தது.

"தம்பீ!" என்றார் அவர்—அந்தப் பெரியவர். "போய் வரட்டுமா?" என்றார், அதைத் தொடர்ந்து!

அமுதன் விழித்தான். 'சரி' என்றான். அந்தப் பெரியவர் இறங்கிச் செல்ல ஆரம்பித்தார். அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் அமுதன். இளைப்பாறிய வண்டி செல்லுவதற்கான 'குறிகள்' செய்தார் 'கார்டு'! அமுதன் யோசித்தான்—வண்டியும் மெல்ல நகர்ந்தது. அமுதன் கீழே— பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்தான். ஆம்: அமுதன் அரக்கோணத்திலேயே இறங்கி விட்டான்.

இதுதான் அரக்கோணம் என்ற பெருமையுடன் மஞ்சள் பலகையிலே கறுப்பு எழுத்துக்கள் சுட்டிக் காட்டின. அமுதன் அவைகளைப் பார்த்துக் கொண்டே நடந்தான்—தண்டவாளத்தின் ஓரமாகவே நடந்தான்.

பரிசோதகர் இல்லை!

வாசல் இல்லை!

அதற்குத் தடுப்பும் இல்லை!

எதிர்ப்பும் இல்லை!

ஆகா, அருமையான வழி—மதிற் சுவற்றிலே போடப் பட்டிருந்த குறுக்கு வழி! வெளியே வந்து விட்டான் அமுதன்.

அந்த இருட்டு மயமான வீதியில் அங்குமிங்குமாக டீக்கடைகளில் எரிந்துகொண்டிருந்த விளக்குகள் பாதையை நன்றாகக் காட்டின. அமுதன் நடந்தான். ஏதோ இத்தனை நாள் இந்த ஊரிலே பழக்கப்பட்டவன்போல் நடந்தான்.

"தம்பீ!"

அங்கிருந்த ஒரு டீ கடையில் உட்கார்ந்த வண்ணம் கூப்பிட்டார். 'அவர்!' ஆம்: ரயிலில் அவனோடு பிரயாணம் செய்த அதே மனிதர்! அமுதன் அவரிடம் வந்தான்.

"பம்பாய் இதுவல்ல தம்பி; அரக்கோணம்! இது அரக்கோணம்!" என்றார் அவர். அவர் பேச்சு சுவற்றிலே அடித்த ஆணியைப் போல பாய்ந்தது. அமுதனின் இதயத்தில்! அவன் ஒன்றுமே பேசவில்லை.

"என்ன தம்பி, கோபமா? இந்தா இந்த 'டீ'யைச் சாப்பிடு" என்றார் அவர். அமுதன் அவரைப் பார்த்தான். டீயைப் பார்த்தான். வாங்கிக் கொண்டான். அவன் பசி அவனுக்கு.

"தம்பி, உன் பெயரென்ன?"

"அமுதன்"

"ஆஹா—அழகான பெயர்"

"அம்மா அப்பா யாருமே இல்லையா?"

அழுதான் அமுதன்—அவன் விட்ட கண்ணீரின் இரண்டு சொட்டு 'டீ' குவளையிலே விழுந்தன. அந்த மனிதர் ஆறுதல் சொன்னார்.

"தம்பீ, நீ எங்கும் போகவேண்டாம். என்னுடனேயே இரு— இந்த இரவு இங்கேயே படுத்துக் கொண்டிருந்த விட்டு காலையிலே வேலூர் போகலாம். பயப்படாதே! நீ என்..."—இழுத்தார் அவர்.

"சரிங்க" என்றான் அமுதன்.

● ● ●

மறுநாள் காலை...

பஸ் நிற்குமிடத்தில் பெரியவரும் அமுதனும் நின்றிருந்தார்கள். பஸ் இன்னும் வரவில்லை. அந்த வழியில் ஓடும் வேலூர் பஸ் ஒன்று 'ரிப்பேர்'ராம்—இன்னொன்று வழியிலே விபத்தில் சிக்கிவிட்டதாம். இன்னும் ஒரே ஒரு பஸ்தான். சாதாரணமாகவே இரண்டு மணிக்கு ஒருமுறை வரும் பஸ், காலை ஆறு மணியிலிருந்து காத்திருந்தும் மணி ஒன்பதாகியும் கூட வரவில்லை.

சும்மா நின்றிருப்பது அமுதனுக்கு என்னவோபோல இருந்தது. ஏதோ பேச வாயைத் திறந்தான்.

"ஏன் தம்பி? சொல்லு. என்ன விஷயம்?" என்றார் அவர்.

"நீங்க வேலூருக்கு எதுக்குப் போறீங்க?"—துணிந்து கேட்டு விட்டான் அமுதன்.

"என் மனைவியைப் பார்க்க"— அவர் குரல் தழ தழத்தது.

பஸ் வந்து விட்டது!

அமுதனும் அவரும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தனர். பஸ் புறப்பட்டது மின்னல் வேகத்திலே!

பகல் மணி 12 ஆகியது. பஸ் வேலூரில் நின்றது இறங்கியதும் ஒரு 'ஓட்டலி'ல் புகுந்து சாப்பிட்டனர். பின்னர் இருவரும் நடந்தனர்.

அமுதன் கேட்டான்: "இப்ப தான் வீட்டுக்குப் போறோமே ஏன் ஓட்டலிலே சாப்பிட்

[தொடர்ச்சி

# எழுத்தாணி

**வேலாயுதம்; சிந்தாமணி**

(?) மொரார்ஜி தேசாய் தென்னாட்டுக்கு விஜயம் செய்தது பற்றி உங்கள் கருத்து என்ன?

வழக்கம்போல் நேரு பெருமானின் ஏக இந்திய பஜனை பாடுவதற்காகப் புதிதாக இந்த வாரம் தருவிக்கப்பட்ட ஒலிபெருக்கி!

**உமா தேவி, புரசைவாக்கம்**

(?) அடுத்தமுறை நேரு அவர்கள் சென்னை வரும்போது, ஜெனத்தூவல் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரழந்தோரின் ஆறு விதவைகளையும் அவர் முன் நிறுத்திக் காட்டப் போகிறார்களாமே?

அதனால் என்ன? சென்ற முறை விமானக் கூடத்தில் திருமதிகள் தாரா செரியன், கனம் லூர்து அம்மையார், இளப்வாலா ஜாதவ் ஆகியோர் அளித்த வரவேற்பு போலத்தான் இதுவும் என்று எண்ணிக் கொண்டு போவார்!

**பொன்னுசாமி, திருச்சி—2**

(?) 'என்னைக் குரங்கு போல ஆட்டி வைத்து மக்களிடம் வேடிக்கை காட்டுகிறார்களே' என்று பண்டித நேரு பேசியுள்ளாரே, ஏன்?

தென் கொரியத் தலைவன் சிங்மன்ரீ அன்றொரு நாள் வர்ணித்ததை இன்றாவது ஒத்துக் கொண்டாரே!

**பி. செழியன், புதுக்கோட்டை**

(?) மந்திரி கக்கன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

நேருவாகி வருகிறார்; அதாவது அவரது நாக்கு நீண்டு வருகிறது!

**டி. வி. முத்துகிருஷ்ணன், தேனும்பேட்டை**

(?) காங்கிரஸ் கண்காட்சி ஏன் நடத்துகிறார்கள்?

அமைச்சர்களின் மாலை நேரப் பொழுது போக்கிற்காகவே நடத்துவதுபோல் தெரிகிறது. ஏனெனில், சென்னை மந்திரி சபையின் நடமாட்டம் அங்கு அதிகமாயிருக்கிறதாம்.

**ந. கிட்டப்பா, மாயூரம்**

(?) திருமங்கலம் திருவாளர் மீண்டும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகி விட்டாராமே?

எதிர்பார்த்ததுதானே! சமீப காலமாக அவர் திராவிடர் இயக்கத்தின் மீது சீறிப் பாய்ந்து வந்தது வேறெதற்கு!

**நாராயணசாமி, மன்னார்குடி**

(?) டி. டி. கே. அமெரிக்கா சென்று வெறுங் கையோடு திரும்பி வந்தாரே...?

யார் சொன்னது! டி. டி. கே. கம்பெனிக்குப் புதிதாக முப்பது அமெரிக்க சாமான்களுக்கு ஏஜன்சி உரிமை பெற்று வந்திருப்பதாக இங்கே ஒரு பலமான வதந்தி உலவுகிறதே!

**வெங்கட்டராமன், கோமல்**

(?) நேரு மறுமுறை சென்னை வரும்போது யாராவது கருப்புக் கொடி காட்டுவார்களா?

சரித்திரம் திரும்பி; ஆச்சாரியாரே கருப்புக்கொடி காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

---

## முகவரி மாற்றம்

•

எஸ். எஸ். இராசேந்திரன்
'அண்ணா இல்லம்'
11—பி. புதுத் தெரு,
எச். டி. ராஜா நகர்,
சென்னை—18.

---

## சும்மா இருப்பது மடமை!

ஆனாலும் பஞ்சாபில் எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. எத்தனை பேர்கள் சிறை சென்றிருக்கின்றனர். பிரதமர் ஜவாஹர்லால் நேரு, இது மடமை என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னார். பிடிவாதக்காரர்கள் கேட்கவில்லை. அவர்கள் வெறி பிடித்துத்தான் இன்னும் அலைகின்றனர்.

இவ்வளவு சண்டையும் வித்தியாசமேயில்லாத இந்தி பஞ்சாபி மொழிகளுக்கு இடையில்தான்! ஆனால் ஹிந்திக்கும் தென்மொழிகளுக்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவு அவ்வளவு அல்ல, முற்றும் மாறுபட்டவை! வார்த்தைகள், உச்சரிப்பு, இலக்கணம் முற்றும் மாறுபட்டவை.

இந்த நிலையில் ஹிந்தி மத்திய சர்க்காரின் ஆட்சி மொழியானால், ஹிந்தியைத் தாய் மொழியாகப் பெற்றவர்கள், தென்னாட்டு மக்களின் ஹிந்தி உச்சரிப்பைச் சகிப்பார்களா? இந்திப் புலவர்கள் தென்னாட்டு மக்களின் ஹிந்தி எழுத்து நடையைச் சகிப்பார்களா? 'இந்தியைப் படித்து விடுவோம்; முன்னேறி விடுவோம்; நாம் ஒன்றும் கஷ்டப்பட மாட்டோம்' என்று சில தென்னாட்டு மக்கள் எண்ணிக் கொண்டு சும்மாயிருப்பது மடமை.

—'கல்கி' (29—12—57)




★ எண்ணத் தெவிட்டாத வண்ண மலர்ச் சோலையாய்...

★ தாயக மண்ணுக்கு உரியோரின் உடைவாளாய்...

★ கண்ணுக்கு நிகர் பெண்ணுக்குப் பெருமைதரும் பொன்னேடாய்...

★ செங்கரும்புச் சுவை சிந்தும் இள மழலைச் செல்வங்களின் புதுமலராய்...

★ தொழிலாளத் தோழர்களின் புரட்சிப் பாசறையாய்...

★ மாணவர்க்குப் பாடி வீடாய்...

★ சித்திரக் கருவூலமாய்...

★ செந்தமிழ்த் தேன்கூடாய்...

★ அறிவுக் கதிர் பாய்ச்சும் காவியத் தொகுப்பாய் தயாராகிறது...!

## தங்கம் நிகர் மலர்!

★ அறிஞர் அண்ணாவின் பொன்னுரையுடன்...

★ நாவலர் நெடுஞ்செழியனின் அமுது நிகர் எழுத்தோவியத்துடன்...

அழகு தமிழ் கொழிக்கும் இதழ் காண்பீர்!

★

மு. கருணாநிதி எழுதும்

★ வரலாற்றுக் கதை
★ கவிதை வரிகள்
★ சிறு நாடகம்
★ சிறுகதை

இத்தனையும் உண்டு!

முத்தனைய பல்லோரின் எழுத்துக் குவியல்களும் உண்டு!

அத்தனையும் கற்கண்டு!

## விலை இரண்டே ரூபாய்தான்!

[செங்கரும்பு கசக்குமோ; செவ்வந்தி நாறுமோ—என்ற விதத்தில் சுவையிலும், அழகிலும் தன்னிகரற்றதாய் 'முரசொலி' அலுவலகம் உருவாக்கும் சிறிய மலரினைப் பெற்றிட இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொண்டு விடுங்கள்!]



...ச்சிடுபவரும், ...ியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை-